கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
27-5-1973
50 காசு





சுவைமிக்க புட்டிங் தயாரிக்க 5 எளிய நிலைகள்:

■ ஒரு கிண்ணத்தில் 7 மேசைக் கரண்டி (தலை தட்டிய அளவு)பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடரையும், 3 மேசைக் கரண்டி (தலை தட்டிய அளவு) சர்க்கரையையும் போடவும். அரை லிட்டர் குளிர்ந்த பாலிலிருந்து சிறிதளவை அத்துடன் கலந்து விழுது போலாக்கவும் ■ மீதியுள்ள பாலை சூடாக்கவும் ■ அத்துடன் கஸ்டர்டு பவுடர் கலவையைச் சேர்த்து, கொதிக்கும் வரை கிளறவும் ■ ஒரு தேக் கரண்டி வெண்ணெய் சேர்த்து விழுதாகும் வரை மரக் கரண்டியால் கிளறவும். ■ பின்னர் நெய்தடவிய அச்சில் கொட்டி, படிய விடவும்.

மென்மையிலும் வளமையிலும் மேலானது பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர். எப்போதும் கைவசம் வைத்திருந்தீர்களானால், ஃபிர்னி, ஐஸ்க்ரீம், ட்ரைபிள் போன்ற விதவிதமான பழத் தின்பண்டங்களையும் புட்டிங்குகளையும் எளிதில் தயாரிக்க உதவும். ஜெல்லி அல்லது பழ சாலாடுடனோ, தேன் கலந்த உலர் பழங்களின் மீது ஊற்றியோ சாப்பிட்டால் சுவையாக இருக்கும். அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப் படுத்தப் பட்டதால், கஸ்டர்டு பவுடர்களிலேயே மிகச்சிறந்தது பிரவுன் & போல்ஸன். முட்டை கலவாதது. உங்கள் சமையல் உன்னதமாய் இருக்க உயர்ந்த சாமானையே உபயோகியுங்கள்

பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர்

இலவசம்! பிரவுன் & போல்ஸன் பக்குவ முறை நூல் நெ. 5. தயவு செய்து இன்றே ஒரு பிரதிக்கு எழுதுக: பப்ளிஸிடி டிபார்ட்மெண்ட்.
கார்ன் பிராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரை. லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ்.எச். சோமானி மார்க், பம்பாய் 1.

OBM 9966 Tam

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்


— பாரதியார்

வண்ண அட்டைப் படத்தில் :

வானகத்து நாரையொன்று
கானகத்து ஓடையிசை
பேனெடுத்து நிற்பதை நாம்
காணப்படம் எடுத்துவைத்தார்

— ஆர். பி. எஸ். மணி






கோகுலம்

மலர் 2 :: இதழ்
மே 27, 1973
பிரமாதீச, வைகாசி 14

சந்தா விவரம் :

ஒரு வருடம் ரூ. 7–00
ஆறு மாதம் ரூ. 3–50

நிர்வாகி, கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை - 600031



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

மகாநாகத்தைக் கருடன் அபகரிப்பது போல் கம்சனைப் பற்றிக் கண்ணபிரான் வதைத்தருளினார். கம்சன் கண்ணபிரானைப் பகைவன் என்று பல காலமும் அவரையே நினைத்துக்கொண்டிருந்தபடியால் பகவானுடைய திருவடி நிழலை டைந்தான். கம்சனுடைய வதத்தைக் கண்டு சபையிலிருந்த அனைவரும் அதிசயம் அடைந்தார்கள்.

கம்சனுடைய தம்பியர்கள் எட்டுப் பேர்கள். சீற்றமடைந்து போருக்கு வந்தார்கள். பலராமர் பரிகம் என்ற ஆயுதத்தால் அவர்களை வதைத்தார்.

தாய் தந்தையரைச் சிறைமீட்டல்

கண்ணபிரான் வசுதேவரையும் தேவகியையும் சிறையிலிருந்து விடுவித்தருளினார். வசுதேவரும் தேவகியும் கண்ணபிரானைப் பரம்பொருள் என்று அறிந்து துதி செய்தார்கள்.

கண்ணபிரான் அவர்களைப் பார்த்து, ''நீங்கள் என்னைப் பெற்றதனால் பெருந்துயரம் அடைந்தீர்கள். நான் உங்களுக்கு ஒரு பணிவிடையும் புரிந்தேனில்லை. இனி நீங்கள் சுகமாக இருங்கள்'' என்றார். தாய் தந்தையர்கள் பலராமனையும் கிருஷ்ணனையும் தழுவி உள்ளம் உவந்தார்கள்.

உக்ரசேனருக்குப் பட்டாபிஷேகம்

கிருஷ்ணமூர்த்தி உக்கிரசேனரைச் சிறையிலிருந்து விடுவித்தார். ''உக்கிரசேனரே! உமது மகன் கம்சன் தங்களைச் சிறையில் அடைத்து அநேக அந்தணர்களையும், பசுக்களையும், சிசுக்களையும் வதைத்தான். அந்த மகாபாவத்தால் அற்பாயுளாக மாண்டான். இனி நீர் அரசராக இருந்து பூமியை ஆட்சி செய்வீராக'' என்று கூறி உக்கிரசேனருக்கு மகுடாபிஷேகம் செய்தார்.

பகவான் வாயுதேவனை அழைத்து நீ இந்திரனிடம் சென்று ''என்னுடைய கட்டளை'' என்று கூறி, 'சுதர்மம்' என்ற சபையைக் கொணருவாயாக!'' என்று கட்டளை யிட்டார். அதன்படியே வாயு பகவான் இந்திரனிடம் சென்று, அந்த அரிய சபையைக் கொணர்ந்து உக்கிர சேனருடைய அரண்மனையில் சேர்த்தான்.

மிகப் பெருமை வாய்ந்த சுதர்மம் என்ற சபையில் வீற்றிருந்து உக்கிரசேனன் கண்ணபிரானுடைய உதவியால் ஆட்சி புரியலானான்.

பலராமரும் கண்ணபிரானும் உபவனத்துக்குச் சென்று அங்கிருந்த நந்தகோபனைக் கண்டு கூறுகிறார் :

''அன்புள்ள தந்தையே! வசுதேவர் கம்சனுடைய பயத்தால் என்னை உம்மிடம் சேர்த்தார். நான் உம்மால் வளர்க்கப்பட்டேன். உம்மை ஒரு போதும் மறக்க மாட்டேன். நீங்கள் கோகுலம் போய்ச் சுகமாக வாழுங்கள். பின்னர் அங்கு வந்து உங்களைச் சந்திப்பேன்.'' என்று கருணையுடன் கூறி ஆடைகளும் அணிகலன்களும் அளித்தார்.

நந்தகோபன் ராமரையும் கிருஷ்ணரையும் தழுவி ஆனந்தக் கண்ணீர் வடித்துச் சகல கோபாலர்களுடன் கோகுலம் சேர்ந்தார்.

குருகுல வாசம்

வசுதேவர் யாதவர்களுக்குப் புரோகிதராகிய கர்காசாரியரை அழைத்து, இராமகிருஷ்ணருக்கு உபநயனம் செய்வித்தார். வறியவர்க்கு அன்னமும், ஆடையும் வழங்கினார்.

இராமரும் கிருஷ்ணரும் அவந்தி தேசம் போய் வேதம், சாஸ்திரம், தநுர் வேதம் முதலிய சகல கலைகளிலும்



வல்ல சாந்தீபினி முனிவரைக் கண்டு வணங்கினார்கள்.

''தபோதனரே! தேவரீரிடத்தில் வித்தையைப் பெற வந்திருக்கின்றோம். அருள் புரிய வேண்டும்'' என்றார்கள்.

சாந்தீபினி முனிவர் நான்கு வேதங்களையும் சகல உபநிடதங்களையும், பிரயோக சாஸ்திரம் ஐந்நூறும்; உப சம்ஹார சாஸ்திரம் ஐந்நூறும், யந்திரங்களையும், மநுதர்மமும், அரச நீதிகள் ஆறும் நாளுக்கொரு கலையாக அறுபத்து நான்கு கலைகளையும் கற்பித்தார். ராம கிருஷ்ணர்கள் கூரிய மதியால் சிரிய கலைகள் அனைத்தும் உணர்ந்தார்கள். இவர்களுடன் சேர்ந்து குசேலரும் கலை பயின்றார்.

இராம கிருஷ்ணர்கள் இருவரும் குருநாதரைத் தொழுது, ''குருதட்சிணை தரக் கருதுகின்றோம். உமக்கு என்ன வேண்டும், பணித்தருளும்'' என்றார்கள்.

சாந்தீபினி முனிவர் இவர்கள் மானிடர்கள் அல்லர் தேவ புருஷர்கள் என்று உணர்ந்து, ''பிரபாக தீர்த்தத்தில் மடிந்த என் புதல்வர்களைக் கொடுப்பது தான் குருதட்சிணையாகும்'' என்றார்.

பலராமரும் கிருஷ்ணரும் தேரேறிப் பிரபாக தீர்த்தத்தை அடைந்தார்கள். இவர்களது வரவை அறிந்த வருணன் ஓடிவந்து வணங்கி நின்றான்.

கண்ணபிரான், ''வருண தேவா! இங்கு மாண்டுபோன குரு புத்திரர்களைத் தருவாயாக!'' என்றார்.

வருணன் ''தேவதேவா! குரு புத்திரனை நான் கண்டேனில்லை. கடலில் சங்கு உருவாக இருக்கின்ற பஞ்சகன் என்ற அரக்கன் குரு புத்திரனைக் கொன்றான். அவனைக் கொல்ல என்னால் ஆகாது'' என்றான்.

பலராமரைத் தேரில் இருக்கவைத்து விட்டுச் சமுத்திரத்துக்குள் புகுந்து பஞ்சகன் என்ற அரக்கனைக் கிழித்துக் கொன்றார். அவனிடத்திலும் குரு புத்திரன் இல்லை. அந்தச் சங்கை எடுத்துக் கொண்டு தேரேறி இயம பட்டணத்தை அடைந்தார். அங்கு பாஞ்ச ஜன்யம் என்ற சங்கத்தை ஊதினார்.


இயமன் அது கேட்டு நடுங்கி ஓடி வந்து இராமகிருஷ்ணர்களை வணங்கி அர்க்கிய பாத்தியங்கள் தந்து, ''நீங்கள் வந்தகாரணம்யாது?'' என்றுகேட்டான்.

''அறக் கடவுளே! என் குரு குமாரன் வினைவயத்தால் மாண்டிருப்பினும் என் அருளால் பிழைத்திருப்பான். அவனை விரைவில் கொண்டு வர வேண்டும்'' என்றார் வசுதேவர்.

இயமன் குரு புதல்வனை அழைத்து வந்து ஒப்புவித்தான். அவனைத் தேரில் ஏற்றிக் கொண்டு சாந்தீபினி முனிவரிடம் தந்து வலம் வந்து வணங்கினார்கள்.

''சுவாமி! உங்கள் புதல்வனைக் கொண்டு வந்து கொடுத்தோம். இன்னும் என்ன வேண்டும்?'' என்றார்கள். சாந்தீபினி முனிவர் மாண்ட மகன் மீண்டு வந்ததைக் கண்டு கண்ணும் கருத்தும் குளிர்ந்து, ''மகனைத் தந்ததுவே போதும். நீங்கள் உங்கள் உறைவிடம் போய்ச் சுகமே வாழுங்கள்'' என்று விடை தந்தார்.

இராம கிருஷ்ணர்கள், குருவிடம் விடைபெற்றுக் கொண்டு மதுரைக்கு வந்து சேர்ந்தார்கள். (தொடரும்)




டேவிஸ் கோப்பை பற்றி

வெள்ளியினலான டேவிஸ் கோப்பையைத் தங்களுடையதாக்கிக் கொள்ளுவதற்காகத்தான், இம்மாத ஆரம்பத்தில் சென்னையில் இந்தியா ஆஸ்திரேலியாவுடன் போட்டி போட்டது. இந்தோனேஷியாவிலும் சிங்கப்பூரிலும் வெற்றிக் கொடி நாட்டி வந்த ஆனந்த அமிர்தராஜ், விஜய் அமிர்தராஜ், லால், ஆகியவர்களின் சாதனைகளில் பொது மக்களும், பத்திரிகைகளும் மகத்தான நம்பிக்கை வைத்திருந்தார்கள். முடிவு மாறிப்போயிற்று.

அது போகட்டும். உலகத்து நாடுகளின் பிரபல டென்னிஸ் ஆட்டக்காரர்களெல்லாம் அடையப் போட்டியிடும் இந்த டேவிஸ் கோப்பையைப் பற்றி இதோ சில குறிப்புகள் :









☐ உலக லான் டென்னிஸ் சாம்பியன் ஷிப்புக்கான — மென்ஸ் நாக் அவுட் டோர்னமெண்ட் — ஆட்டத்தில் இறுதி வெற்றி பெறுப வர்களுக்கு இந்தக் கோப்பை பரிசாக அளிக்கப்படும்.

☐ நான்கு ஒற்றையர் ஆட்டமும் ஒரு இரட்டையர் ஆட்டமும் கொண்டது இந்தப் பந்தயம்.

☐ ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த மிஸௌரி மாகாணத்தில் உள்ள ஸெயிண்ட் லூயி நகரத்தவரான டுவைட் எஃப் டேவிஸ் என்பவரால் நிறுவப்பட்டது இக்கோப்பை. இவர் இரட்டையர் ஆட்டத்தில் 1899முதல் 1901ம் ஆண்டு வரை சாம்பியனாகத் திகழ்ந்தவர். பின்னால் ஜனாதிபதி கூலிட்ஜ் (Coolidge) அமைச்ச ரவையில் (1923 – 1929) யுத்த இலாகா காரியதரிசியாகப் பணி யாற்றியவர் இந்த டேவிஸ்.

☐ 1900ம் ஆண்டில் 'இண்டர் நேஷனல் சாலஞ்ச் கப்' என்ப தாக இந்தக் கோப்பையை உருவாக்கி நிறுவினார் டேவிஸ். இக் கோப்பை பின்னால் அவர் நினைவாக அவர் பெயராலேயே அழைக் கப்பட்டது.




புகைப்படங்கள்:

இந்தியன் எக்ஸ்பிரஸ் &
கே. விஸ்வநாத்

☐ ஆரம்ப நாட்களில் அமெரிக்காவும் பிரிட்டனும் மட்டுமே இந்தக் கோப்பைக்கான போட்டிகளில் ஈடு பட்டன. இதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு வேறு நாடுகளும் இந்தப் போட்டியில் பங்கு பெற லாயின. ஒவ்வொரு நாட்டிலும் சிறந்த டென்னிஸ் ஆட்டக்காரர்கள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது டேவிஸ் கோப்பை.

☐ 1900, 1901ம் ஆண்டுகளில், அமெரிக்கா இதைக் கைப்பற்றியது. இதன் பிறகு தொடர்ந்தாற் போல் நான்கு தடவைகள் பிரிட்டிஷாரின் உடைமை யாகியது இது. 1927ம் ஆண்டு முதல் முதலாக பிரான்ஸ் இக் கோப்பையைக் கைப்பற்றியது.

அதெல்லாம் சரிதான். இன்று இந்த டேவிஸ் கோப்பையை இறுதிப் பந்தயத்தில் கோட்டைவிட்ட நாம் அடுத்த ஆண்டாவது தாவிப் பிடிக்க முடியுமா? முயற்சியும் உழைப்பும் இருந்தால் ஏன் முடியாது?









இடிதேவன் ஏமாந்த கதை

"விகேயெம்"

கிரேக்கர், ரோமானியர்களைப் போலவே ஐரோப்பாவின் வடக்குப் பகுதியில் வாழ்ந்த புராதன மக்களுக்கு ஓடின் என்பவர் கடவுளாக விளங்கினார். ஓடினும் மற்றும் பல வீரக் கடவுளர்களும் பூமியை ஆண்டு வந்தார்கள். அவர்கள் வாழ்ந்த நகரத்துக்கு அஸ்கார்டு என்று பெயர். அந்த நகரிலிருந்த ஒரு பெரிய மாளிகையில் இக் கடவுளர் வாழ்ந்து வந்தார்கள். இந்தப் பகுதியின் இன்னும் வட கோடியில் மலைப் பிரதேசமான ஜாடினீமில் சில ராட்சதர்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களிடமிருந்து மனித இனத்தைக் காத்து வந்தார்கள், அஸ்கார்டில் இருந்து ஆட்சி செலுத்திய கடவுளர்கள்.

ஓடினின் மகன் தார். வானத்தில் இடி இடிக்கிறதே· அந்த இடியின் அதிதேவதை இந்தத் தார். தாரிடம் ஒரு பெரிய சுத்தியல் உண்டு. இந்தச் சுத்தியலையே தன் ஆயுதமாகக் கொண்டு ஜாடினீம் ராட்சதர்களுடன் போரிடக் கிளம்பினான். லோகி என்ற தன் வீர நண்பனையும் தன்னோடு அழைத்துக் கொண்டான். இருவரும் தாரினுடைய இரும்பினலான ரதத்தில் வடக்கு நோக்கிப் பயணமானார்கள். இந்த ரதத்தை இழுத்துச் சென்றது எது தெரியுமா? பால் வெள்ளை நிறத்திலுள்ள இரண்டு செம்மறியாடுகள்.

வெகுதூரப் பிரயாணத்தின் முடிவில் இருள் கவியும் நேரத்தில் ஒரு கிராமத்துக்கு வந்தார்கள் தாரும் லோகியும். தூரத்தில் ஒரு குடிசை தென்பட்டது. இரவை அங்கு கழித்து, காலையில் பிரயாணத்தைத் தொடரத் திட்டமிட்டார்கள். இவர்களை வரவேற்ற குடிசைவாசி அவர்களுடைய பசிக்குத் தன்னிடம் ஏதுமில்லை என்று கூறினான். தார் வருந்தப்படவில்லை. "கவலைப்படாதே. உங்களுக்கும் நான் விருந்து அளிக்கிறேன்" என்று கூறித் தன் ரதத்தை இழுத்து வந்த இரண்டு செம்மறியாடுகளையும் அறுத்து உணவு தயாரிக்கலானான்.

குடிசைவாசியின் குடும்பத்தையும் தங்களோடு விருந்துண்ண அழைத்தான், "ஆனால் ஒரு நிபந்தனை!" என்று கூறினான். அந்தக் குடிசைவாசியும் அவன் மனைவி மக்களும் அவ



லைச் சூழ்ந்துகொண்டார்கள். ‘இந்த ஆட்டின் இறைச்சியை மட்டுமே நீங்கள் சுவைக்க வேண்டும். இதன் எலும்புகளில் ஒன்றைக்கூட நீங்கள் உடைக்கக்கூடாது'' என்று உத்தரவிட்டான் தார்.

தாரினுடைய இந்த நிபந்தனை கிராமத்தானின் மகனுக்கு வியப்பாக இருந்தது. அவன் பெயர் தியால்ஃபி. தன் சகோதரி ரோஸ்காவிடம், ''எலும்புகளை உடைக்கக்கூடாதாமே? விந்தையாக இருக்கே. எலும்பின் நடுவில்தான் சுவையான ரசம் இருக்கும். அதைச் சுவைத்து மகிழாமல் இருப்பார்களோ?'' என்று கிசுகிசுத்தான். தார் பார்க்காத போது ஆட்டின் ஒரு கால் எலும்பினை நன்கு உடைத்து அதனுள்ளிருந்த ரசத்தை உறிஞ்சிக் குடித்தான் தியால்ஃபி. சாப்பிட்ட பின் எலும்புகளை மூலையில் உள்ள ஆடுகளின் தோலின்மீது போட்டு விடும்படி தார் சொல்லி இருந்தான். அதன்படியே தியால்ஃபி அந்த உடைந்த எலும்பையும் மற்றவர்களைப் போலவே அதில் வீசினான்.

காலையில் எழுந்த தார், ஆட்டுத்தோலை அதில் உள்ள எலும்புகளோடு இரு கைகளிலும் அள்ளியபடி ஒரு தனி இடத்துக்குப் போனான். கடவுளர்களுக்கே தெரிந்த சில மந்திரங்களைச் சொல்லி அதைத் தடவினான். அடுத்த வினாடி எலும்புகள் படபடவென்று ஒன்று கூடின. தோல் எழும்பி அதைப் போர்த்திக் கொள்ள மறுகணம் உயிர் பெற்ற இரண்டு வெள்ளை ஆடுகள் ரதத்தை நோக்கி நடக்கலாயின. ஓர் ஆடு மட்டும் நொண்டி நொண்டி நடப்பதைக் கண்ட தார், என்ன நடந்திருக்கும் என்பதைப் புரிந்துகொண்டான். தான் எச்சரித்திருந்தும் இப்படிச் செய்ததைக் கண்ட தாருக்குக் கோபம் குமுறிக்கொண்டு வந்தது.

தான் செய்த காரியத்தின் விளைவை அறிந்த தியால்ஃபி உடனே ஓடி வந்து தாரின் கால்களில் விழுந்து, தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். ''தியால்ஃபி! நீ எத்தனை பெரிய குற்றம் புரிந்திருக்கிறாய், பார். நமக்கு உணவான ஆட்டை நொண்டியாக்கி விட்டாய். இதற்காக உன்னைத் தண்டிப்பதை விட நான் உன்னை என்னுடன் அசுர வேட்டைக்கு அழைத்துப் போகப் போகிறேன். கீழ்ப்படிந்து நடப்பது எப்படி என்பதை நீ கற்றுக்கொள்வாய்'' என்றான் தார்.



தன் சகோதரனுடன் ரோஸ்காவும் போவதென்று முடிவு செய்தாள். தார் அவளையும் அழைத்துக் கொண்டான். தார், லோகி, தியால்ஃபி, ரோஸ்கா நால்வரும் தங்கள் பிரயாணத்தைத் தொடங்கினார்கள். அது முதல் தாருக்கு இரண்டு உண்மையான நண்பர்கள் ஏற்பட்டார்கள். தார் எங்கு போனாலும் அவனைப் பின் தொடர்ந்து செல்லலானார்கள், தியால்ஃபியும் ரோஸ்காவும்.

பைன் மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்த கானகத்தினிடையே போய்க் கொண்டிருந்தார்கள், நால்வரும். ஜாடின்மின் மர்ம மலைகள் தூரத்தே தோன்றலாயின. ஒரு நாள் மாலை, பிரயாணத்தினால் களைப்படைந்த அவர்கள் கானகத்தினிடையே மரங்கள் இல்லாத ஒரு மேட்டுப் பகுதியிலிருந்த விநோதமான ஒரு வீட்டைக் கண்டார்கள். அக்கட்டடத்தின் வாசல் அந்த வீட்டைப் போலவே விசாலமாகவும் திறந்தும் இருந்தது. அதனுள்ளே ஒரு பெரிய கூடமும் அதை ஒட்டினாற் போல் ஐந்து சிறு அறைகளும் இருந்தன. அந்த வீட்டினுள் யாரையும் காணோம். எதைப் பற்றியும் அதிகம் சிந்திக்க இயலாத களைப்பில் அவர்கள் தங்கள் உணவைச் சமைத்து உண்டு உறங்கிப் போனார்கள்.

நள்ளிரவில் அவர்கள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டார்கள். பூகம்பம் போல், வீடே குலுங்கியது. ஊழிக் காற்றாகப் புயல் வீசியது, ஒரு பெரிய ராட்சதன் குறட்டை விடுவதுபோல். தார், அந்த நில அதிர்ச்சியின் காரணம் காண வெளியே சென்று எட்டிப் பார்த்தான். இருட்டில் அவனுக்கு எதுவும் தெரியவில்லை. காலையில் அந்த வீட்டிலிருந்து கிளம்பும்போது அவர்கள் முன்னால் ஒரு ராட்சத உருவம் எழும்பி நின்றது. வானளாவி நின்ற அவ்வுருவம் அவர்களைக் குனிந்து பார்த்தது. அது ராட்சதன் ஸ்கிர்மிர். ''என்னுடைய கை உறையினுள் என்ன செய்தீர்கள்?'' என்று கூறியபடி அந்த ராட்சதன் தாரும் அவன் சகாக்களும் இரவு தங்கியிருந்த வீட்டைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டான். தாருக்கு வியப்பான வியப்பு. அவர்கள் தங்கியிருந்தது இந்த ராட்சதனுடைய கையுறையில் தான். உள்ளங் கைதான்- பெரிய கூடம். ஐந்து விரல்களுக்குமான உறை ஐந்து அறைகள்!

ஸ்கிர்மிர் போன்ற ராட்சதர்களுடன் போரிடத்தானே தார் இத்தனை தூரம் வந்திருந்தான். ஆகவே தனது மகிமை பொருந்திய சுத்தியலைச் சுழற்றி ஸ்கிர்மிரை நோக்கி வீசினான். இப்படி மூன்றுமுறை, தன் பலமெல்லாம் ஒன்று சேர்த்துத் தார் தன் சுத்தியலை அந்த ராட்சதனின் தலையை நோக்கித் தாக்கினான். ஏதோ பறவை இறகு தலையில் பட்டதைப் போல் அந்த ராட்சதன் தன் நெற்றியைத் தடவிக் கொண்டான். பிறகு இவர்களை லட்சியமே செய்யாதவனாக ஸ்கிர்மிர் திரும்பி நடந்தான்.

தார் மனம் தளரவில்லை. ராட்சதர்களின் உறைவிடமான உத்கார்டு நகருக்குள் போய் அவர்களுடன் போரிட வேண்டுமென்ற முடிவை அவன் மாற்றிக் கொள்ளவில்லை. அன்று மாலையே ராட்சதனின் தலைநகருக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள். அதன் இரும்புக் கதவுகள் மூடியிருந்தன. ஆனால் வானளாவி நின்ற அந்தக் கதவுகளில் பொதித்த இரும்புக் கம்பிகளினிடையே உள்ள இடைவெளி தாரும் மற்றவர்களும் மிகச் சுலபமாக நுழைந்து போகுமளவுக்கு விசாலமாக இருந்தன. வாசல் கதவு மூடியிருந்தாலும் உள்ளே போவதில் அவர்களுக்குச் சிரமம் ஏதும் இருக்கவில்லை.

அரண்மனைக்குள் புகுந்தவர்கள் மிக மிக விசாலமான ஒரு கூடத்துக்கு வந்தார்கள். அங்கு ஸ்கிர்மிர் உணவருந்த உட்கார்ந்து கொண்டிருந்தான், தன் நண்பர்கள் சிலருடன்.

''நானும் உங்களோடு உணவருந்த வரலாமா? அனுமதிக்கிறீயா?'' என்று கேட்டான், தார்.

''நட்பு முறையில் சில போட்டிகள் வைப்போம். அவைகளில் பங்கு கொண்டால்தான் எங்களோடு அமர்ந்து உணவருந்த அனுமதி கிடைக்கும்'' என்றான்-ஸ்கிர்மிர். தாரும் அதற்கு இணங்கினான்.

அங்கிருந்த ராட்சதர்களில் ஒருவன் தன்னுடன் சரிசமமாகச் சாப்பிடும் போட்டிக்கு ஒருவனை அழைத்தான். தார், தன் நண்பன் லோகியை அவனோடு போட்டியிட அனுமதித்தான். ஒரு மேஜையின் முன்னால் ஒரு கோடியில் லோகியும் மறு கோடியில் மஞ்சள் வண்ணமும் நெடிதுயர்ந்த உருவமுமுடைய அந்த ராட்சதனும் அமர்ந்தார்கள். நடுவில் ஒரு பெரிய தட்டில் பக்குவம் செய்யப்பட்ட இறைச்சி வைக்கப்பட்டது. இருவரும் தம் தம் பக்கமிருந்து சாப்பிட்டுக் கொண்டே வந்தார்கள். உணவின் நடுப்பாகத்துக்கு இருவரும் வந்த

போது சரி சமமாகச் சாப்பிட்டிருந்தார்கள். ஆனால் லோகி இறைச்சியை மட்டுமே சாப்பிட்டிருந்தான். அந்த ராட்சதனோ இறைச்சியோடு அதிலிருந்த எலும்புகளையும் விழுங்கி யிருந்தான். ஆகவே அந்த ராட்சதனே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அடுத்து ஹூகி என்ற ராட்சதன் தன்னோடு ஒற்றைக் காலில் ஓடிவரக் கூடியவர் யார் என்று சவால் விட்டான். உடனே தாரின் பணியாளனை தியால்ஃபி ஹூகியோடு ஒற்றைக் காலில் ஓட முன்வந்தான். போட்டியின்போது தியால்ஃபிக்கும் ஹூகிக்கும் மிக நீண்ட இடைவெளி ஏற்பட்டுவிட்டது. ஒற்றைக் கால் ஓட்டத்தில் ஹூகி நெடுந் தொலைவுக்கு ஓடிப் போய் விட்டான்.

அடுத்துத் தாரின் முறை. மேஜையின் மீது ஒரு பெரிய கொம்பு நிறுத்தப்பட்டிருந்தது. கொம்பு வாத்தியம் பார்த்திருப்பீர்களே, அது போல. அதில் பழரசம் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது. அதைக் குடித்துக் காலியாக்கவேண்டும் என்பது போட்டியின் நிபந்தனை. தன் மூச்சை அடக்கி மூன்று முறை உறிஞ்சிக் குடித்தான் தார். ஆனாலும் அதன் மட்டத்தில் மயிரிழைகூடக் குறையவில்லை. பழரசம் அப்படியே இருப்பதைக் கண்ட தார் தன் தோல்வியை ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழி?

கடைசியாகத் தார் தன்னோடு மல் யுத்தம் செய்து தன்னை வெற்றிகொள்ள யாராவது முன்வருவார்களா என்று கேட்டான். ஸ்கிர்மிர் குடுகுடு கிழவியை அழைத்து வந்து தாரின் முன்னால் நிறுத்தி, ''மல் யுத்தத்தில் இவளை வெற்றிகொள், பார்க்கலாம்'' என்றான். கிழவியோடு யுத்தமிடுவது தன் வீரத்துக்கு இழுக்கு என்று உணர்ந்தாலும் போட்டியில் பின்வாங்கக் கூடாது என்று அவளோடு மோதினான் தார். என்ன ஆச்சரியம்! அவளைக் கீழே வீழ்த்தச் சுற்றிப் பிடித்ததுமே தாரின் உடலிலிருந்த பலமெல்லாம் போய் விட்டது. அந்தக் கிழவி தாரை தூக்கித் தரையில் மல்லாத்திப் போட்டு விட்டாள்.

தானும் தன் தோழர்களும் ஜாடினீம் ராட்சதர்களிடம் தோல்வி அடைந்ததை எண்ணி அவமானத்தினால் குன்றிப்போனான் தார். அவர்களைத் தங்களுடன் உணவருந்த அநுமதித்து விருந்து வைத்தான் ஸ்கிர்மிர். தாரைத் தனியே அழைத்துப் போய் ''தோல்வி அடைந்து விட்டதாக வேதனைப்படாதே. என்னுடைய நகரத்துக்குள் நுழைய அநுமதித்தேனே அது எதனால்? நீ ஒரு மாவீரன் என்பதனால்தான். என்னுடைய மாயா ஜால மகிமையினால் நான் உன்னை ஏமாற்றினேனே யல்லாது, நீயோ உன் தோழர்களோ வீரமில்லாதவர்கள் அல்ல. நீ மூன்று முறை என்மீது உன் சுத்தியலைச் சுழற்றி வீசினாயே, அன்று அதில் ஒரு தாக்குதல் என் தலையில் பட்டிருந்தாலும் என் கபாலம் பிளந்து நான் பரலோகம் போயிருப்பேன். ஆனால் உன் ஒவ்வொரு வீச்சையும் கண்ணுக்குப் புலப்படாத மலைகளைக் கொண்டு தாங்கச் செய்தேன். அதோ பார், உன் சுத்தியல் அடியால் துவாரம் விழுந்து கிடக்கும் மலைகளை'' என்று சுட்டிக் காட்டினான் ஸ்கிர்மிர். தூரத்தே மூன்று மலைகள் — அவைகளில் குகைபோன்ற மூன்று ஓட்டைகள் தெரிந்தன.

''உன் நண்பன் லோகி சாப்பாட்டுப் போட்டியிட்டது யாருடன் தெரியுமா?'' என்று தொடர்ந்து விளக்கலானான் ஸ்கிர்மிர். ''லோகி பெருந் தீனிக்காரன்தான். ஆனால் போட்டியிட்ட எதிராளியோ நெருப்பு! ஆகவே இறைச்சியோடு எலும்புகளையும் பஸ்மீகரமாக்கி விட்டது.

''தியால்ஃபியோடு ஒற்றைக் கால் ஓட்டம் ஓடிய ஹூகி என்னுடைய எண்ணம். எண்ணத்துக்கு ஈடாக யாரால்தான் ஓட முடியும்? கொம்பிலுள்ள பானத்தை நீ உறிஞ்சினாயே, அதன் மறுமுனை சமுத்திரத்தில் இருந்தது. நீ மூன்று கவளம் குடித்ததினால் கடல் நீர் எவ்வளவு தூரம் வற்றிப் போய்விட்டது பார்'' என்று காட்டினான் ஸ்கிர்மிர். சமுத்திரம் கடற்கரையிலிருந்து வெகு தூரத்துக்குப் போயிருந்தது. தாருக்கு வியப்பான வியப்பு. ஸ்கிர்மிர் சிரித்தபடியே சொன்னான்: ''தார்! நீ கிழவி என்று எண்ணிப் போரிட்டாயே. அது தான் முதுமை. எந்த மனிதனும் முன்னாலோ பின்னாலோ அதனிடம் தோல்வியடைய வேண்டியதுதானே?''

தான் எப்படி ஏமாற்றப்பட்டோம் என்பதை உணர்ந்தபோது தாருக்குத் தன் வீரத்தில் கர்வம் ஏற்பட்டது. ஆனால் அதே சமயம் ராட்சதர்களிடம் கோபமும் ஏற்பட்டது. தன் சுத்தியலை உயர்த்தி, ''நேர்மையாக என்னிடம் போரிட வா!'' என்று கத்தினான். ஆனால் அந்த விநாடியே ராட்சதன் ஸ்கிர்மிர், அந்தப் பெரிய நகரம் அரண்மனை எல்லாமே மறைந்தன. அந்த நான்கு பிரயாணிகளும் தாங்கள் வெறும் பொட்டல் வெளியில் நிற்பதைக் கண்டு திகைத்தார்கள்.



எலியும் இரக்கமும்



எலியாரே ! குட்டி எலியாரே !
ஏனோ கூண்டில் மாட்டிக் கொண்டீர் ?
'விழி விழி' யென்றே விழிக்கின்றீர் !
வீணாய்ப் பயந்தே சாகின்றீர் !

பூனை மாமா கண்டிருந்தால்
புசித்திருப்பார் இந்நேரம் !
ஆனால் உமக்கு அதிர்ஷ்டந்தான்
அப்படி ஏதும் ஆகவில்லை !

அப்பா அம்மா பார்த்திருந்தால்
அவரோ இரக்கம் கொள்ளாரே !
எப்போ தோஉமை அடித்திருப்பார்
எமலோ கந்தான் போயிருப்பீர் !

இரக்கம் கொண்டேன், உம்மேலே!
ஏனோ கொல்ல மனமில்லை!
திறந்தே விட்டேன் ; ஓடிப்போம் !
திரும்பி வந்து தொலையாதீர் !

—அழகு பழனிச்சாமி

மந்திரவாதி

மந்திர வாதி வருகிறார்
மாயா ஜாலம் செய்கிறார் !
அந்தரத்தில் மாங்காய் தொங்கும்
அழகைச் செய்து காட்டுறார் !

முட்டை ஒன்று எடுக்கிறார் !
சட்டை பையில் போடுறார் !
பட்டப் பகலில் முட்டையும்
பறந்து ஓடிப் போகுதே ?

துணியை எடுத்துக் கிழிக்கிறார் !
துரித மாக இணைக்கிறார் !
அணிலைக் கூட வரவழைத்து
ஆட்டம் போடச் சொல்கிறார் !

மண்டை ஓட்டைப் பார்க்கிறார்!
சண்டை போடச் செய்கிறார்!
துண்டு போட்டு மறைக்கிறார்!
மண்டை ஓடும் மறையுதே !

நீட்டு கையை என்கிறார் !
லட்டு ஒன்று எடுக்கிறார் !
பிட்டுப் பிட்டுத் தருகிறார்!
போடு வாயில் என்கிறார் !

தந்தி ரங்கள் செய்கிறார்!
தரையில் கோடு போடுறார் !
சொந்தமாகக் கிட்ட வந்து
துட்டு நம்மைக் கேட்கிறார் !

— பவணாந்தி



——..——..—— காகிதத்தை உட்பக்கமாக மடித்து 'மேடு'


துறுதுறுத்த கைகளுக்கு.....

கோடை விடுமுறையில் பொழுது போவதுதான் எத்தனை சிரமமாக இருக்கிறது! மாலையானால் விளையாட வெளியே போகலாம். வெயில் வேளையில் வீட்டுக்குள்ளிருந்தபடியே என்ன செய்வது? ஏன், எவ்வளவோ செய்யலாமே! உங்களுக்குக் காகிதங்களை மடித்துக் கப்பல் செய்யத் தெரியுமில்லையா? அது போதுமே. அதே மாதிரிக் காகிதங்களை மடித்து மடித்துப் பிரித்துப் பிரித்து எத்தனை எத்தனையோ அழகான வடிவங்களை உருவாக்கலாம். குரங்கு, புறா, கொக்கு, தவளை, மனிதன், குழந்தை, வாத்து, பட்டுப் பூச்சி, மலர் என்ன வேண்டும் உங்களுக்கு? அத்தனையையும் காகிதத்தில் உருவாக்கிவிட முடியும். ஆனால் உங்கள் விரல்கள் துறுதுறுத்தபடி இயங்க வேண்டும். காகிதங்களை ஒழுங்காக மடிக்கத் தெரிய வேண்டும்.


ஜப்பானியர்கள் இந்தக் கலையில் வல்லவர்கள். அவர்கள் காகிதத்தில் எதையும் உருவாக்கி விடுவார்கள். இந்தக் கலைக்கு 'ஓரிகாமி' (ORIGAMI) என்று பெயர். நீங்களும்தான் அந்த ஓரிகாமி கலையைக் கொஞ்சம் கற்றுக் கொள்ளப் பாருங்களேன். வரும் பக்கங்களில் உங்களுடைய கைகளுக்குக் கொஞ்சம் வேலை காத்திருக்கிறது. கெட்டியான காகிதங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஒன்பது அங்குலச் சதுரமான காகிதம் எல்லா விதமான உருவ அமைப்புக்களுக்கும் பயன்படும். வண்ணக் காகிதம் — அதுவும் ஒரு பக்கம் ஒரு வண்ணமும் மறு பக்கம் வேறு வண்ணமும் உடைய 'மார்பிள்' காகிதமானால் நீங்கள் சிரமப்பட்டு உருவாக்கும் அமைப்புக்கள், கவர்ச்சிகரமாக இருக்கும்.

முதல் தடவையிலேயே உருவங்கள் சரியாக வராமல் போனால் கவலைப்படாதீர்கள். பல காகிதங்களைக் கசக்கிப் போட்ட பிறகு உங்கள் கைக்குத்தானே ஒரு லாகவம் வரும். நீங்கள் உபயோகிக்கும் காகிதங்கள் 'ஸ்டிஃப்' ஆக இருப்பது நல்லது மட்டும் அல்ல, அவசியமும்கூட!

1. நாய்க்குட்டி





இதைச் செய்வது ரொம்ப ரொம்பச் சுலபம். 'கஷ்க்கு முஷ்க்கு' சின்ன நாய்க்குட்டிக்கு ஒரு சதுரக் காகிதத்தை (படம் 1) குறுக்காக மடித்துக்கொள்ளுங்கள். பிறகு படம் 2ல் கோடிட்டுக் காட்டியுள்ளபடி முதலில் மடித்த காகிதத்தை மடியுங்கள். பிறகு அதைப் படம் 3ல் காட்டியுள்ளபடி மடித்துப் பிரியுங்கள். படம் 4ல் காட்டியுள்ள அமைப்புக் கிடைக்கும். இதில் நாய்க்குட்டியின் மூக்குப் பகுதியாக அம்புக் குறியிட்ட நுனியை மேல் நோக்கி மடித்து விடுங்கள். வால் பகுதிக்குக் கீழ் நுனியில் கோடிட்டுக் காட்டியுள்ள இடத்தில் மடித்து அதை வெளிப்புறமாக மடக்கி விடுங்கள். இப்போது நாய்க்குட்டி உருவாகிவிடும். காதுப் பகுதியின் மடிப்பில் படத்தில் காட்டியுள்ளபடி இலேசாக மடித்துப் பிரித்து விட்டால் நாய்க்குட்டி தத்ரூபமாக உங்கள் முன்னால் உட்கார்ந்து கொண்டிருக்கும்.





2. வண்ணத்துப் பூச்சி

இனி ஒவ்வொன்றுக்கும் இப்படி மடி அப்படிப் பிரி என்று உங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். நீங்கள் தான் காகிதத்தை மடிப்பதில் 'எக்ஸ்பர்ட்' ஆகிவிட்டீர்களே. ஆகவே, ஒவ்வொரு படங்களிலும் அம்புக் குறி சொல்லும் உத்தரவுப்படி காகிதங்களை மடித்துக் கொண்டு போக வேண்டியது தான். குறிப்பிட்ட உருவம் சரியாக அமையாவிடில் நீங்கள் மடிப்பதில் எங்கோ தவறு செய்திருக்கிறீர்கள் என்று அர்த்தம். கற்பனையும், கைலாகவமும், நிதானமும், கலை உள்ளமும் இருந்தால் இந்த ஓரிகாமியில் எதையும் உருவாக்கி விடலாம்.











4. பறக்கும் புறா

புறாவின் மூக்குத்தான் முக்கியம். அதை மடித்து உள்பக்கமாக அமுத்துவதில் தனித் திறமை வேண்டும். அதேமாதிரி அதன் பறக்கும் நிலை இறக்கைகள்.


எட்டாவது நிலையில் புறா உருவானதும் அதை பேப்பர் ஏரோப்ளேனை வானத்தில் வீசுவதுபோல் இதையும் வீசினால் நிஜமாகவே புறா பறப்பது போல் இருக்கும்.




3. வாத்தும் வாத்துக் குஞ்சுகளும்




வாத்தின் மூக்குத் தத்ரூபமாக அமைய அதன் அலகை விரல்களிடையே வைத்து அழுத்தி உருவாக்கவும். வாத்துக்கும் வாத்துக் குஞ்சுக்கும் மடிப்புக்களில் உள்ள சிறு மாற்றங்களைக் கவனமாகப் பார்க்கவும். மடிப்புக்களைப் பிரிக்கும்போது காகிதத்தை லாகவமாகக் கையாள வேண்டும்.






5. மனிதனும் குழந்தையும்


குழந்தை முகத்தை உருவாக்க மனித முகத்தை உருவாக்கும் ஆறாவது படத்திலிருந்து குழந்தை முகத்துக்கான மடிப்புக்களை அதில் குறிப்பிட்டபடி மேற்கொள்ளவும். கன்னம், தாடை, முகவாய், தலை ஆகிய இடங்களில் மனித முகத்துக்கும் குழந்தை முகத்துக்கும் உள்ள மடிப்புக்களில் இருக்கும் மாறுபாட்டைக் கவனமாகப் பார்த்து உருவாக்க வேண்டும்.






6. பூனைக் குட்டி

பூனையின் உடல் தலை இவைகளைத் தனித் தனியாகச் செய்து இணைக்க வேண்டும். தலை செய்வது சுலபம். உடல் செய்யப் பல தடவை காகிதத்தை மடித்துப் பார்த்து நீட்டி நெளிவெடுக்க வேண்டும். உடல் தயாரிப்பின் ஒன்பதாவது நிலையில் கழுத்துப் பாகத்தை எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு வளைவாக்கித் தலையை அதில் செருகவும்.




குழந்தைகள் ஒரு இலட்சியத்தை
அடைய விரும்புகின்றனர்.
அப்படியானால், சேமிப்பு செய்
வதின் இலட்சியத்தை,
பாங்க் ஆப் இந்தியாவில்
அவர்களின்பேரில் சேமிப்புக்
கணக்குகளை ஆரம்பித்து,
பூர்த்தியடைய ஏன் உதவக்
கூடாது? அதன்மூலம் அவர்கள்
சுலபமான சிறந்த சேமிப்பு
செய்ய முடியும்.
■ சேமிப்பு செய்யும் பழக்கத்தை
கடைப்பிடிக்க அதுவே ஒரு நல்ல
வழி. இளமையிலேயே இந்தப்
பழக்கத்தை அவர்கள்
கடைப்பிடிக்கட்டும்.
நல்ல திட்டமிட்டு
செய்வது
நல்ல பலனை
அளிக்கும்...
இளம் வயதினர்களின்
சேமிப்புகளுக்கு விசேஷ
ஊக்கங்களை அளிக்கிறது
பாங்க் ஆப் இந்தியா.
சேவிங்ஸ் பாங்க் கணக்கு
களுக்கு அதிகபட்சமாக
வருஷத்திற்கு 4% வட்டியும்,
டேர்ம் டெபாசிட்டுகளுக்கு
வருஷத்திற்கு 7½% வட்டியும்
அளிக்கிறது.
பாங்க் ஆப் இந்தியா
இந்த நட்சத்திரத்தில்
உங்கள் ஒளிமயமான
வருங்காலம் இருக்கிறது.
AAS/B/89



''வெளியிலே தலைகாட்ட முடியல் லீங்க! வெய்யில் ஒட்டிக்குதுங்க!''

''அப்போ இந்த ஸ்டாம்பு எல் லாத்தையும் ஒட்டிக் கொண்டா!''







புகைப்படங்கள்:
என். ராமகிருஷ்ணா



''என்னடா இது! உங்க தாத்தா பானையோடு தண்ணீர் குடிக்கிறாரே!''

''அது காலிப் பானைடா. அதிலே இருக்கிற ஒரு சொட்டுத் தண்ணீரைத் தான் காலி பண்றாரு!''

சிரிக்கச் சிரிக்க

சாமா





புகழ்பெற்ற பாக்தாத் நகரத்தின் வீதியில் ஒரு நாள் மூன்று பிச்சைக்காரர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். மன்னர் தமது அரண்மனையின் உப்பரிகையிலிருந்து அந்த மூவரையும் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு ஒரே வியப்பு. வியப்பின் காரணம், அந்த மூன்று பிச்சைக்காரர்களுக்கும் ஒவ்வொரு கண் குருடாக இருந்ததுதான்.

அப்போதே இன்னொரு ரசமான காட்சியையும் கண்டார் அரசர். அந்தப் பிச்சைக்காரர்கள் ஒரு வீட்டின் முன்னல் போய் நின்றதும் அவ் வீட்டின் கதவு திறந்து கொண்டது. இரண்டு கறுப்பு நாய்களைச் சங்கிலியில் பிணைத்துப் பிடித்துக் கொண்டிருந்த ஒரு பெண் இவர்களை வரவேற்று உள்ளே அழைத்துப் போனான். அரசருக்கு இதற்குமேல் அரண்மனையில் இருப்புக் கொள்ளவில்லை. அரண்மனையிலிருந்து வெளிப்பட்ட. அரசர் நேரே அந்த வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டினர். நாய்களைப் பிடித்துக் கொண்டிருந்த அந்தப் பெண் வந்து கதவைத்

மூன்று பிச்சைக்காரர்கள்



திறந்தாள். அரசரை உள்ளே அழைத்துக் கொண்டு போனுள். அங்கே ஒரு கூடத்தில் ஒற்றைக் கண் குருடான அந்த மூன்று பிச்சைக்காரர்களும் உட்கார்ந்திருந்தார்கள்.

''உங்களுக்கு ஒவ்வொரு கண் குருடாகி இருப்பது அதிசயமான செயலாக இருக்கிறதே, இது எப்படி?'' என்று கேட்டார் அரசர்.

ஒரு பிச்சைக்காரன் மன்னரை உட்காரும்படிக் கேட்டுக் கொண்டு, ''நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு கதை சொல்லுகிறோம். அதைக் கேட்டால் எங்கள் ஒரு கண் குருடானதன் காரணம் புரியும்'' என்ருன்.

மன்னரும் அவர்கள் முன்னே அமர்ந்து கொண்டு கதை கேட்கத் தயாராஞர்.

''இங்கிருந்து வெகு தூரத்தில் உள்ள ஒரு நாட்டின் மன்னர் என்று


தகப்பனார். எனக்கு ஓர் உயிர்த் தோழன். ஒரு நாள் அவன் என்னிடம் தனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டான். அருமைத் தோழனாயிற்றே, மறுப்பேனா? செய்வதாக வாக்களித்தேன். சத்தியம் வாங்கிக் கொண்டான். அதன் பிறகுதான் அவன் கேட்ட உதவி எத்தகைய பயங்கரமானது என்பது தெரிந்தது.

ஓர் அதி அற்புத அழகு வாய்ந்த பெண்ணோடு அவனை ஒரு கல்லறைக்குள் வைத்து அதைத் திறக்க முடியாதபடி அடைத்துவிட வேண்டும் என்பதே அவனது வேண்டுகோள். எங்கள் நாட்டில் கல்லறை என்பது பூமி மட்டத்துக்குக் கீழே ஒரு சிறு—ஆனால் விசாலமான - அறை. அதில் இறந்தவர்களையும் அவர்களது உடைமைகளையும் கொண்டு போய் வைத்து அதன் நுழைவாயிலை மூடி அடைத்துவிடுவோம். இதுவே சமாதி.

நண்பனின் வேண்டுகோளைக் கேட்ட... எனக்கு எப்படி இருக்கும்? ஆனால் சத்தியம் செய்து கொடுத்தபடி வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்று வாதாடினான் நண்பன். அவனது அருமைக் காதலிதான் அந்த அழகி. அவள் இறந்துவிட்டாள். அந்த வேதனை தாங்காத அவன் இனி வாழ விரும்பவில்லை. அதுதான் அவனது இம்முடிவுக்குக் காரணம். வேறு வகையின்றி அவன் வேண்டுகோளை நிறைவேற்றினேன். ஆனால் அந்தக் கொடுமையை என்னால் தாங்க முடியவில்லை. என் நண்பனை உயிரோடு அக்கல்லறைக்குள் வைத்து அடைத்துவிட்டு வந்த காட்சியே என் சிந்தனையைக் குதறிக் குலைத்துக் கொண்டிருந்தது. என் நண்பனின் தகப்பனாரிடம் போய் நடந்ததைக் கூறி விட்டேன்.

என்னோடு அவர் கல்லறைக்கு ஓடி வந்தார். அடைப்புக்களை நீக்கி ஆவேசத்துடன் உள்ளே ஓடினார், தம் அருமை மகனைக் காக்க வேண்டி. ஆனால், அந்தோ ! அங்கே என் நண்பன் உயிரோடு இல்லை. என் நண்பனின் தகப்பனாருக்கு ஏற்பட்ட கோபமும் துக்கமும் என்னைக் கொன்றுவிடும் அளவுக்கு உக்கிரமாயின. ஆனால் நான் அவரிடமிருந்து தப்புவதற்கு பெரு முயற்சி செய்தும் என் ஒரு கண்ணை இழக்கும்படியாயிற்று. அன்று முதல் நான் இப்படிப் பரதேசியாகப் பிச்சை எடுத்துத் திரிகிறேன். என் நண்பன் இறப்பதற்குக் காரணமாக இருந்துவிட்ட எனக்கு அரண்மனை வாழ்வு கசந்துவிட்டது. இதுதான் என் ஒரு கண் போன கதை.'' என்று தன் கதையைக் கூறினான் முதன் பிச்சைக்காரன்.

இரண்டாவது பிச்சைக்காரன் தன் கதையைக் கூறலானான். '' நானும் ஒரு மன்னரின் மகன்தான். ஒரு சமயம் நான் வேற்று நாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தபோது வழியில் திருடர்



களால் கொள்ளையடிக்கப்பட்டேன். தன்னந்தனியாகக் கையில் காசில்லாமலிருந்த நிலையில் எனக்கு ஒரு தையல்காரன் நண்பனானான். அவனோடு இருக்கும் போது நான் குற்றம் இழைத்தேன். அதற்குரிய தண்டனையாக, ஒரு பூதம் அப்படியே என்னை ஆகாயத்தில் தூக்கி பூமியில் வீசிக் கொல்ல நினைத்தபோது நான் அதனிடம் இரக்கம் காட்டும்படிக் கெஞ்சினேன். அந்தப் பூதமும் என்னைக் கொல்லாமல் என் ஒரு கண்ணை மட்டும் குருடாக்கி விட்டுவிட்டது. அது முதல் நான் இப்படிப் பிச்சை எடுத்து வாழ்ந்து வருகிறேன்'' என்றான்.

மூன்றாவது பக்கீர் தன் கதையைக் கூறலானான். ''உண்மையில் நான் பக்கீர் அல்ல. நானும் ஓர் அரசகுமாரன்தான். ஒரு சமயம் கடற் பிரயாணம் செய்யும் போது என் கப்பல் புயலில் சிக்கி ஒரு பாறையில் மோதி உடையவே நான் ஒருவன் மட்டுமே ஒரு தீவில் உயிரோடு ஒதுக்கப்பட்டேன். அந்தத் தீவில் ஓர் இளைஞன் எனக்கு நண்பனானான். ஒரு நாள் அவனுக்காகப் பழம் நறுக்குவதற்குக் கத்தியைப் பயன்படுத்தும்போது எதிர்பாராதவிதமாகக் கத்தி அவன் உடலில் பாய்ந்து அவன் உயிரையே குடித்துவிட்டது. இதனால் மனமுடைந்த நான் அதற்குத் தண்டனையாக என் ஒரு கண்ணைக் குருடாக்கிக் கொண்டேன். அதன் பிறகு இப்படிக் கந்தலாடையுடன் ஊர் ஊராகப் பிச்சை எடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறேன்'' என்றான்.

மூன்று பேருடைய சோகக் கதைகளைக் கேட்ட மன்னரின் மனம் அவர்கள்பால் இரக்கம் கொண்டது. அதே சமயத்தில் இரண்டு கறுப்பு நாய்களைச் சங்கிலியால் பிணைத்து இழுத்து வந்த அந்தப் பெண், ''நானும் கூட உங்களுக்கு ஓர் அதிசயமான கதையைக் கூறப் போகிறேன்'' என்றாள்.

''இந்த இரண்டு நாய்களும் என்னுடைய சகோதரிகள்தான். என் இரு சகோதரிகளுடன் நான் ஒரு சமயம் கடல் பிரயாணம் மேற்கொண்டேன். கொஞ்ச நாள் கடலில் சென்ற எங்கள் கப்பல் ஒரு தீவின் அருகே நங்கூரமிட்டு நின்றது. அந்தத் தீவில் காணப்பட்ட எல்லாரும் கற்சிலைகளாக இருந்தனர். உயிர்த் துடிப்போடு இயங்கும் யாரையும் அங்கே காண முடியவில்லை. கடைசியாக ஓர்



அரண்மனையின் ஒரு பெரிய கூடத்தில் ஓரே ஒரு வாலிபன் மட்டும் கவலையோடு உட்கார்ந்திருந்தான். அவனைச் சுற்றி இருந்த எல்லாரும் சிலைகளாகப் பலவித நிலைகளில் நின்று கொண்டும் உட்கார்ந்தபடியும் இருந்தனர். நான் அந்த வாலிபனின் அழகில் மனத்தைப் பறி கொடுத்தேன். என்னோடு அவனைக் கப்பலுக்கு அழைத்து வந்தேன். எங்கள் தேசத்துக்குப் போனதும் நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ளுவது என்று முடிவு செய்தோம். நாங்கள் இருவரும் ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தோம். எங்கள் கப்பலைப் பாக்தாத் நகரத்துக்குச் செலுத்தலானோம்.


நானும் அந்த அழகிய வாலிபனும் மகிழ்ச்சியாக உல்லாசமாக இருப்பது என் சகோதரிகளுக்குப் பொறாமையாக இருந்தது. ஒரு நாள் நாங்கள் இருவரும் கப்பலின் மேல் தட்டில் நின்றவாறு கடலுக்குள் ஓடும் மீன்களையும் வெள்ளி அலைகளையும் பார்த்து ரசித்தபடி மகிழ்ந்திருக்கும் போது என் சகோதரிகள் இருவரும் எங்களைக் கடலுக்குள் பிடித்துத் தள்ளிவிட்டார்கள். நாங்கள் கடலில் மூழ்கிச் சாக வேண்டும் என்பதே அவர்கள் எண்ணம். எனக்கு நன்றாக நீந்தத் தெரியும். ஆனால் அந்தச் சுந்தர வாலிபனுக்கு நீந்தத் தெரியாது. அவனைக் காப்பாற்ற நான் எவ்வளவோ போராடினேன். முடியவில்லை. அந்த அழகன் ஆழ்கடலின் அடியிலே ஜலசமாதியானான். நான் மட்டும் நீந்தி நீந்தி ஒரு தீவில் கரை சேர்ந்தேன். எனக்கிழைத்த துரோகத்துக்குத் தண்டனையாக என் சகோதரிகள் இருவரையும் பெரிய பாம்பு வடிவமுடைய ஓர் பூதம் இரு நாய்களாக்கி விட்டது. அது முதல் என் சகோதரிகளான இவ்விரு நாய்களையும் நான் பராமரித்து வருகிறேன்'' என்று தன் கதையைக் கூறி முடித்தாள்


பாக்தாத் மன்னர் அந்த அழகியின் கதையைக் கேட்டு முன்னைவிட மனம் இளகினார். அந்தப் பிச்சைக்காரர்களையும், அந்தப் பெண்ணையும் பார்த்து, '' நீங்கள் வாழ்க்கையில் ரொம்பவும் வேதனை அனுபவித்துவிட்டீர்கள். இனி வாழ்க்கையில் இன்பங்களை அனுபவிக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது' என்றார். மன்னர் வெறும் நாடாளும் அரசர் மட்டுமல்ல. நல்ல மனம் படைத்த அவர் மந்திர தந்திரங்களில் வல்லவரும்கூட. ஏதோ மந்திரங்களைக் கூறி வெறும் வெளியை நோக்கி யாரையோ கூப்பிட்டார். அவர் முன்னால் குபு குபுவென்று பல வண்ணப் புகை பொங்கி எழுந்து சுருண்டு மேலே கிளம்பியது. முடிவில் அதன் நடுவே இறக்கையோடுகூடிய ஒரு பெரிய பாம்பு தன் நாக்குகளைச் சொடுக்கியபடி தோன்றியது. அதன் வாயிலிருந்தும் கண்களிலிருந்தும் தீக் கொழுந்து விட்டுக் கொண்டிருந்தது.


அந்தப் பாம்பைப் பார்த்து அரசர் கட்டளை இட்டார். ''வேதனை அனுபவித்து வரும் இவர்களுக்கு இனி சந்தோஷத்தைக் கொடு'' என்றதும் அடுத்த விநாடி புகையும் பாம்பும் மறைந்தன. ஆனால் அதே வேளையில் கறுப்பு நாய்கள் இரண்டும் இரு அழகிய பெண்களாயின. பிச்சைக்காரர்களின் குருடான கண்கள் நேராயின. அவர்களின் கந்தல் ஆடை மறைந்து அரச குமாரர்களாகவே விளங்கினார்கள்.

அந்த மூன்று சகோதரிகளும் அந்த மூன்று அரச குமாரர்களை மணந்து கொண்டார்கள். அந்த மூன்று தம்பதிகளையும் பாக்தாத் அரசர் தமது அரண்மனையில் சில காலம் விருந்தாளிகளாக வைத்திருந்து பிறகு அவரவருடைய நாட்டுக்கு ஏராளமான வெகுமதிகளுடன் அனுப்பி வைத்தார்.




கிழவரின் கடிதத்துடன் விரைந்தது டைகர். வழியில் குறுக்கிட்டது ஒரு காட்டாறு. அசுர வேகத்தில் சுழித்தோடும் அந்த ஆற்றைக் கடந்து தான் போலீஸ் அவுட் போஸ்டுக்குப் போக வேண்டும்.
டைகர் தயங்கவில்லை. வாயில் கவ்விய கடிதத்துடன் ஆற்றில் குதித்து எதிர் நீச்சலடித்தது.
அம்மா, என்ன இழுப்பு! நடுநடுவே பெரிய பாறைகள் வேறு.
நீருக்குள் மறைந்திருந்த ஒரு பாறை இடறிவிட ஆற்று வேகத்தில் அதைச் சமாளிக்க முடியாத டைகர் தடுமாறிப் புரண்டது. வாயிலிருந்த கடிதம் நழுவியது.
ஆற்று வெள்ளத்துடன் அதன் போக்கில் நெடுந்தூரம் போய்க் கரை ஏறியது டைகர்...
இதோ அந்தக் கடிதம். ஆனால் இனி பயன் படாது. தோல்வியுடன் கிழவரிடம் திரும்பிப் போக வேண்டியது தான்.
ஓடோடி வந்த அது கண்ட காட்சி...?
ஐயோ! பெரியவர் தூங்கி விட இந்தக் கொடியவர்கள் தப்பி விட்டார்களே. இவர்களோடு போராட முடியாது. ஷீலாவைக் காப்பாற்றும் வழியைப் பார்ப்போம்.


சீக்கிரம் கட்டிப் போடு. அந்தப் பிசாசு நாய் வருவதற்குள் நாம் அந்தப் பெண்ணோடு தப்பிவிட வேண்டும்.
கிழவனின் வாயில் துணியை அடை.
டைகர், போலீஸைக் கூட்டி வந்து விட்டாயா?
டைகரின் தோல்விப் பார்வையும் ஊளையும் வெளியே கேட்ட கொடியவர்களின் குரலும் ஷீலாவுக்கு நிலைமையைப் புரிய வைத்தன. அடுத்த விநாடி.....
டைகர், தள்ளு...ம்...இன்னும் கொஞ்சம் நகர்த்து. கதவைத் திறக்க முடியாதபடி இதை முட்டுக் கொடுத்து விடுவோம்.
கிழவரைக் கட்டிப் போட்டு விட்டு ஆவலோடு உள்ளே வந்தவர்களுக்கு அடைத்த கதவு அசைந்து கொடுக்கவில்லை.
மரியாதையாகத் திறந்து விடு. இனி நீ தப்ப முடியாது. கதவை உடைத்துக் கொண்டு உன்னைத் தூக்குவோம்.
டைகர் உள்ளிருப்பதை அழர்களுக்குத் தெரியாத போது, அது ஷீலாவுக்குத் தப்பும் வழியைச் சொல்லித் தருவது பற்றிக் கனவிலும் நினைக்க முடியுமா?
டைகர்! என் பின்னாலேயே நீயும் வந்து விடு.
தொடரும்....



பேசும் புள்ளிகள்

“கட்டு கட, கட்டு கட்டு கட்டு கட, கட !”

தான வாத்தியக் கச்சேரியோ என்று நினைக்கிறீர்களா? இல்லை, இது ஒரு பாஷை! ஆமாம். 'அவசரமான செய்தியா? தந்தி கொடு' என்கிறோமில்லையா? இந்தத் தந்தியை எப்படி அனுப்புகிறார்கள்? 'புள்ளி, கோடு, கோடு, கோடு புள்ளி புள்ளிபுள்ளி — இந்த பாஷையில்தான் தந்தி பறக்கிறது, இங்கிருந்து டெல்லிக்கு. இந்தத் தந்திகளுக்கு மோர்ஸ் முறை என்று பெயர்.

ஆங்கில எழுத்துக்களுக்குப் புள்ளிகளையும், கோடுகளையும் அமைத்து உருவகம் கொடுத்து அதை மின் அலைகள் மூலம் அனுப்பும் அற்புத முறையைக் கண்டு பிடித்தார் ஒரு மேதை. அவர் பெயர் **சாமுவேல் ஃபின்லே பீரீஸ் மோர்ஸ்.** இந்தத் தந்தி முறையை இவர் எப்படிக் கண்டுபிடித்தார்? மோர்ஸ் பெரிய விஞ்ஞானியா? இல்லை. அப்படியானால்?

அவர் ஓர் ஓவியர். சித்திரக் கலையில் வல்லவர். ஓவியங்களை வரைவதும் சித்திரக்கலாசாலையில் மாணவர்களுக்கு ஓவியக் கலையைப் போதிப்பதும் அவரது தொழில்.

இவர்தான் பல்லாயிரம் மைல்களைச் சில விநாடிகளில் கடந்து செய்திகளை அனுப்பும் அற்புத முறையைக் கண்டு பிடித்தார். ஆனால் அப்போது — சித்திரக் கலை பயிலும் மாணவராயிருந்த போது — இப்படி ஒரு சாதனையைத் தாம் செய்யப் போகிறோம் என்று அவருக்குத் தெரியாது. ஓவிய மாணவரான மோர்ஸ் மின்சாரத்தின் தத்துவங்களைப் பற்றி ஆராய்வதிலும் ஆர்வம் காட்டினார்.

ஒரு சமயம் சல்லி என்ற கப்பலில் லண்டனிலிருந்து அமெரிக்காவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார் மோர்ஸ். அப்போது கப்பலின் உணவுக்கூடத்தில் இவரது மேஜையிலே இவருக்கு அருகே அமர்ந்திருந்த ஒருவருடன் மின்சாரம் பற்றி விவாதிக்கலானார். மின்சாரத்தின் தோற்றமும் சாதனைகளும் பிரபலமாகாவிட்டாலும் பரபரப்பூட்டுவதாக இருந்த காலம் அது. அவரோடு விவாதித்ததன் விளைவு, கப்பலில் மோர்ஸ் தம் அறைக்குள்ளேயே தாளிட்டுக் கொண்டு ஆராய்ச்சியில் ஈடுபடலானார். கப்பலில் உள்ளவர்களுக்கு அவரது திடீர் மறைவு வியப்பை அளித்தது.

கப்பல் பிரயாணத்தில் தனிமையில் இருந்து மின்சக்தியைக் கொண்டு சங்கேத முறையில் செய்திகளை அனுப்ப முடியுமா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்ட மோர்ஸுக்கு அப்போது வயது நாற்பத்து ஒன்று. ஒரு சிலர் இங்கிலாந்திலும், பிரான்ஸிலும் தந்தி முறையில் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் வியக்கத்தக்க பலன் ஏதும் கிடைக்கவில்லை. நிச்சயமற்றதும், பொருட் செலவு உள்ளதுமாகச் சில முறைகள் பரீட்சிக்கப்பட்டுக் கைவிடப்பட்ட நிலை அது.

கப்பல் நியூயார்க்கை நெருங்கிக் கொண்டிருந்தது. தம் அறைக்குள் சிறைப்பட்டுக் கிடந்த மோர்ஸ் வெளியே வந்தார்.

சில மாதங்களுக்கு முன்புதான் அவர் தமது மனைவியை இழந்திருந்தார். அந்தத் துயரத்தை மறக்கவே அவர் ஐரோப்பாவின் பல நகரத்து மாதா கோயில்களுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்திருக்கிறார். வரும்போதுதான் இந்தப் புதிய சிந்தனை செயல் எல்லாம். இனி வாழ்க்கைக்கு ஏதாவது உத்தியோகம் பார்த்தாக வேண்டும் என்ற கவலையோடு கையில் கப்பலில் தயாரித்த வரைபடங்கள் அடங்கிய பையோடு தரையில் இறங்கினார் மோர்ஸ்.

அவருடைய நண்பர்கள் அவரைக் கைவிடவில்லை. நியூயார்க் சர்வகலாசாலையில் ஓவிய ஆசிரியராக ஒரு வேலை வாங்கிக் கொடுத்துவிட்டார்கள். பகல் எல்லாம் சித்திரக் கலை, இரவெல்லாம் செய்திகளை மின்சக்தியின் உதவியால் எப்படி வேறு இடத்துக்கு அனுப்புவது என்ற ஆராய்ச்சி. அவர் வசித்தது எளிய சிறிய அறை. ஓவியக்கூடம், ஆராய்ச்சிக் கூடம் எல்லாம் அதுவே

தான். ஒரு பழைய கடிகாரத்தின் ஸ்பிரிங், சக்கரம், ஒரு பாட்டரி, கொஞ்சம் ஒயர் ஆகியவைகளைக் கொண்டு மின் சக்தியால் ஒரு காகிதப் பென்சில், தானாக நகரும் காகிதத்தில் குறிகளைத் தானாக வரையும் ஓர் அமைப்பை உருவாக்கிவிட்டார் மோர்ஸ்.

காகிதத்தில் பென்சில் குறிக்கும் கோடுகளைச் சில அடிகள் தூரத்திலுள்ள மற்றோர் அமைப்பு ஏற்று அதை ஒலியாக்கியது. ஆரம்ப கட்டம்தான். அதிக தூரத்துக்குச் செய்திகளை அனுப்ப இயலவில்லை. ஆனால் மோர்ஸ் சும்மா இருக்கவில்லை. ஐந்து ஆண்டுகள் அதனோடு போராடினார். நியூயார்க்கி-



கிருஷ்ணவேணி

லிருந்து பாஸ்டனுக்குச் செய்திகளை அனுப்பிப் பெற வேண்டும் என்ற தீவிரத்துடன் செயல்படலானார்.

இந்தக் கால கட்டத்தில் மோர்ஸின் மாணவரான ஆல்ப்பிரட் வைல் என்பவர் இவருடன் கூட்டாளியானார். வைலின் தகப்பனார் நியூ ஜெர்சியில் பிரபல நீதிபதி, செல்வந்தர். ஸ்டீபன் வைல் என்று பெயர். தங்கள் முயற்சிக்குப் பண உதவி செய்ய வேண்டும் என்று அவரிடம் கேட்டார்கள் மோர்ஸும் ஆல்பிரட்டும்.

''இரண்டாயிரம் டாலர்களுக்குமேல் ஒரு பென்னிகூடத் தர மாட்டேன். உங்கள் தயாரிப்பு வெற்றியடையுமானால் அரசாங்கத்திடம்தான் மேற்கொண்டு பண உதவியைக் கேட்க வேண்டும்'' என்றார் வைல். இருவரும் சம்மதித்தனர்.

அவருடைய மாளிகையிலேயே ஒரு மூலையில் மோர்ஸும் ஆல்பர்ட் வைலும் தங்கள் தந்தி யந்திர மாதிரியை அபிவிருத்தி செய்து அதன் பேடண்ட் உரிமையைப் பதிவு செய்தும் கொண்டனர். ஒரு நாள் தாம் உருவாக்கியுள்ள யந்திரத்தைச் சோதித்துப் பார்க்குமாறு ஸ்டீபனை அழைத்தார் மோர்ஸ். மாளிகையின் ஒரு மூலையில் ரிஸீவிங் யந்திரத்துடன் மோர்ஸ் அமர்ந்திருந்தார். இன்னொரு கோடியில் ஆல்பர்ட் அமர்ந்திருந்தார். வைல் தம் மகனிடம் ஒரு குறிப்பை எழுதிக் கொடுத்து ''இதை உங்கள் யந்திரத்தின் மூலம் உன் நண்பனுக்கு அனுப்பு. அவர் அதை ஏற்று நீ என்ன செய்தி அனுப்பினாய் என்பதைச் சொல்கிறாரா பார்க்கலாம்'' என்றார். ஆல்பர்ட் அப்படியே செய்தார். வைல், மோர்ஸிடம் போனார். அதற்குள் செய்தியைச் சங்கேத முறையில் பெற்ற மோர்ஸ் அதைக் காகிதத்தில் சரியாக எழுதி வைலிடம் நீட்டினார்.

''பொறுமையாகக் காத்திருப்பவர் இழப்பாளியாக மாட்டார்'' — தாம் கொடுத்த குறிப்பை மோர்ஸின் கையெழுத்தில் படித்து வைல் மகிழ்ந்து போனார். ''பலே பலே! உங்கள் சாதனம் சரியாக வேலை செய்கிறது''. என்று பாராட்டினார்.

மோர்ஸ் தம் யந்திரத்தில் மேலும் பல அபிவிருத்திகளைச் செய்தார். ஆரம்ப காலத்தில் இவர் புள்ளிகளையும் கோடுகளையும் எழுத்துக்குப் பதில் பயன்படுத்தவில்லை. ஒரு பென்சில் காகிதத்தில் கோடு கிழிக்கும். அதிலிருந்து இவர் வார்த்தைகளை உருவாக்குவார். இது கொஞ்சம் சிரமமாகவும் குழப்பமாகவும் இருந்தது. இதை மாற்றி எளிய நிரந்தரமான ஒரு முறையைப் பற்றிச் சிந்திக்கலானார் மோர்ஸ்.

ஒரு நாள் மாலை செய்தித் தாளைப் படித்துக் கொண்டிருக்கும்போது திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. 'புள்ளிகளையும் கோடுகளையும் ஆங்கில எழுத்துக்களுக்குப் பதில் அமைத்துப் பார்த்தால் என்ன?' 'E' என்ற எழுத்துக்கு ஒரு புள்ளி, 'T' என்ற எழுத்துக்கு ஒரு புள்ளியும் ஒரு கோடும் — இப்படியே எல்லா எழுத்துக்களுக்கும் ஒரு சங்கேதக் குறி கொடுத்து விட்டால்? இந்தச் சிந்தனையில் தீவிர கவனம் செலுத்திய மோர்ஸ் ஆங்கில எழுத்-

துக்கள் அத்தனையையும் புள்ளிகளும் கோடுகளுமாக மாற்றிவிட்டார்.

1837ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ந் தேதி தம் கல்லூரி ஹாலில் தம் யந்திரம் வேலை செய்வதைக் கூடியிருந்த மாணவர், ஆசிரியர்களுக்கு இயக்கிக் காட்டினார். தங்கள் யந்திரத் தினால் செய்திகளை விரைவில் அனுப்பும் ஒரு சாதனத்தை உருவாக்கி விடலாம் என்ற நம்பிக்கை வளர்ந்தது மோர் ஸுக்கு.

சங்கேதக் குறி ஒலி அலைகளை மூன்று மைல் தூரத்துக்கு அனுப்ப முடிந்த நிலையில் 1843ம் ஆண்டு மோர்ஸும் வைலும் தங்கள் கண்டுபிடிப்போடு வாஷிங்டனுக்குப் பயணமானார்கள். ''காங்கிரஸ் (அரசாங்கம்) முப்பதினுயிரம் டாலர்கள் நமக்கு வழங்கு மானல் நாம் வாஷிங்டனையும் பால்டிமோரையும் தந்தியால் இணைக்கலாம். நாற்பத்தி நான்கு மைல்கள்'' இந்தக் கனவுகளோடு தலைநகருக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனல் மோர்ஸின் தேவையைக் காங்கிரஸ் அங்கீகரிக்கவேண்டுமே?

மோர்ஸின் திட்டம் பற்றியும் அவரது தேவை பற்றியும் காங்கிரஸில் விவாதிக்கப்பட்டது. தந்தியின் பெருமையையும் பயனையும் அறியாத மெம்பர்கள் கேலியும் கிண்டலுமாக அதைத் தாக்கிப் பேசினர்கள். அமெரிக்கத் தபால் இலாகாவும் மோர்ஸ் திட்டத்துக்குக் காங்கிரஸ் உதவுவதை விரும்பவில்லை. லாபகரமாக இயங்கி வரும் தங்கள் எக்ஸ்பிரஸ் மெயில் சர்வீஸ் பாதிக்கப்படும் என்று பயந்தனர். காங்கிரஸ் முன் மோர்ஸ் அவர்களே தமது கட்சியை விளக்கி வாதாடினர்.

''இந்த என்னுடைய பில்லுக்கு அனுமதி வழங்காவிடில் என்னிடமிருந்து நீங்கள் எதையுமே எதிர்பார்க்க வேண்டாம். நான் பழையபடி என்னுடைய பிரஷ்ஷையும் வர்ணங்களையும் எடுத்துக் கொள்ளுவேன். என் சித்திரங்களுக்கு நல்ல தேவை இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை டெலிகிராஃப் இறந்து விட்டது போலத்தான்'' என்று வேதனையோடு கூறிவிட்டு வெளியேறினர்.

காங்கிரஸில் வாதப் பிரதிவாதங்கள் காரசாரமாக நடந்தன. பிப்ரவரி 23ம் தேதி அந்த ஆண்டின் காங்கிரஸ் கூட்டத்தின் கடைசி நாள். அதற்குள் மோர்ஸின் பில்லுக்கு அனுமதி கிடைத்தால்தான் உண்டு. அன்று பகல் முழுதும் மோர்ஸ் ஸெனட்டில் உட்கார்ந்திருந்தார். முடிவு எடுக்கப்படவில்லை. இரவு மணி பதினென்று. இன்னும் ஒரே ஒரு மணிதான் இருந்தது. அந்தக்

கூட்டத் தொடர் முடிய. ஆனால் அனுமதிக்காகக் காத்திருந்த பில்களோ நூற்றி நாற்பத்தி நான்கு இருந்தன. இவ்வளவும் வோட்டுக்கு விடப்பட வேண்டும்.

மோர்ஸ் நம்பிக்கை இழந்தார். தமது திட்டத்துக்கு அனுமதி கிடைக்காது என்று மனமொடிந்து போய் வீடு திரும்பினார்.

''ஹோட்டல் பாக்கியைக் கொடுத்து விட்டு நான் நியூயார்க் திரும்ப வேண்டியதுதான். ரயில் டிக்கட்டுக்குப் போகப் பாக்கி என்னிடம் ஏழே சென்டுகள்தான் இருக்கும்.'' இப்படி எண்ணமிட்டபடியே தள்ளாடி நடந்தார் ஹோட்டலை நோக்கி மோர்ஸ்.

மறு நாள் காலை நியூயார்க் கிளம்புவதற்குத் தயாராக ஹோட்டல் மாடியிலிருந்து இறங்கி வந்தபோது தம்மை எதிர்பார்த்து ஒரு பெண் காத்திருப்பதைக் கண்டார். புதிய கண்டுபிடிப்புக்களைப் பதிவு செய்யும் அதிகாரியுடைய மகள் அவள். அன்னி எல்ஸ்வொர்த் என்பது அவளுடைய பெயர்.

''மிஸ்டர் மோர்ஸ் உங்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி. உங்கள் பில் காங்கிரஸில் பாஸாகி விட்டது. ஜனாதிபதி அதில் கையொப்பமிடுவதை என் அப்பா பார்த்து விட்டுத்தான் இரவு வீட்டுக்கு வந்தார்'' என்றாள். எப்படி இருக்கும் மோர்ஸுக்கு? ஆனந்தத்தினால் ஆடிப் போனார். கொஞ்ச நேரம் அவரால் பேசவே முடியவில்லை. எல்ஸ்வொர்த்தின் கைகளைப் பற்றிக்கொண்டு நாத் தழுதழுக்க ''உன் தகப்பனாரும் நீயும்தான் என் உற்ற நண்பர்கள். தந்திக் கம்பிகள் போடப்பட்ட பின் முதல் செய்தியை அனுப்புவதற்கு நீதான் வரவேண்டும்'' என்றார் அவளிடம்.

''அது என் பாக்கியம்'' என்று பூரித்துப் போனாள் எல்ஸ்வொர்த்.

மோர்ஸ் பட்ட பாட்டுக்குப் பலன் கிடைத்து விட்டது. உடனே உற்சாகத்துடன் வேலையைத் தொடங்கினார். ஆட்கள் அமர்த்தப்பட்டனர். வாஷிங்டனிலிருந்து பால்டிமோருக்குப் பூமிக்கு அடியில் தந்திக் கம்பி போடப்பட வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார் மோர்ஸ். அதன்படி அமைத்தபோது கம்பிகளில் சென்ற மின் சக்தி பூமியில் பாய்ந்து வீணாயிற்று. ஆகவே கம்பியைப் பருத்தி நூலைச் சுற்றி இன்ஸுலேட் செய்தார். இதனால் செலவு ஏராளமாகியது. ஐந்து மைல் தூரத்துக்கு இன்ஸுலேட் செய்த ஒயர் பூமிக்கடியில் போடப்பட்டது. ஆனால் செலவோ இருபதாயிரத்துக்கு மேலாகி விட்டது. அனுமதி கிடைத்ததோ முப்பதினாயிரம் டாலர்கள்தான். சங்கடம் சூழ்ந்து கொள்ளவே தவித்துப் போனார், மோர்ஸ்.

எஸ்ரா கார்னல் என்று ஒரு நண்பர் மோர்ஸுக்கு. அவர் ஒரு யோசனை தெரிவித்தார். ''ஒயரை பூமிக்கடியில் கொண்டு போவானேன்? கம்பங்களை நட்டு ஆகாயத்திலேயே கொண்டு போனால்? மின் சக்தியும் வீணாகாது, இன்ஸுலேட் செய்யும் செலவும் கிடையாது.'' உடனே இந்த யோசனை ஏற்கப்பட்டது. கம்பங்கள் நடப்பட்டன. உடைந்த கண்ணாடி பாட்டிலின் கழுத்துப் பகுதியைக் கம்பங்களின் முனையில் இணைத்துக் கட்டி அதனோடு தந்திக் கம்பியைப் பொருத்தி இழுத்துக் கொண்டு போனார்கள். இரு நகரங்களுக்கிடையே ஏராளமான கம்பங்களை வரிசையாக நட்டுக் கம்பிகளால் இணைத்தார்கள். பாமர ஜனங்கள் இதனால் பயந்தார்கள், மின்சாரத்தினால் தாக்கப்படுவோமோ என்று.

திட்டம் முடிந்தது. 1844ம் ஆண்டு மே மாதம் 24ந் தேதி வாஷிங்டன் நகரில் கௌரவம் மிக்கவர்கள் எல்லாம் சுப்ரீம் கோர்ட் சேம்பரில் கூடினார்கள். மோர்ஸ் தம் யந்திரத்தின் முன்னால் தவிக்கும் உள்ளத்தோடு உட்கார்ந்திருந்தார். அதே போலப் பால்டிமோர் நகரில் அவரது நண்பர் ஆல்ஃபர்ட் வைல் காத்திருந்தார், மோர்ஸின் செய்தியை ஏற்றுத் திருப்ப. தந்தி மூலம் முதல் செய்தியை அனுப்பும் பேறு மோர்ஸுக்குச் சுபச் செய்தியைக் கொண்டு வந்த அன்னி எல்ஸ்வொர்த்துக்குத்தான் என்று சொல்லவும் வேண்டுமா? What hath God Wrought? (கடவுள் என்ன சொன்னார்?) என்ற அன்னியின் செய்தியை மோர்ஸ் 'கட்டு கட கட்டு கட்டுக் கட்டுக் கட' என்ற சங்கேத ஒலிக் குறிகளில் தட்டி அனுப்பினார். வைல் அவர் அனுப்பிய செய்தியைத் துல்லியமாக ஏற்று அதை மறுபடியும் வாஷிங்டனுக்குத் தந்தி மூலம் திருப்பி அனுப்பினார்.

செய்திகளை வெகு விரைவில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அனுப்பும் தந்தி முறை வெற்றியளித்துவிட்டது. பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் காப்பதற்கான ஓர் அற்புத முறை உருவாகி விட்டது. மோர்ஸ் உருவாக்கிய 'புள்ளி கோடு' முறையில் இன்று எத்தனையோ நவீன உத்திகள் புகுந்து வளர்ந்துவிட்டன. விண்வெளி ஆராய்ச்சிக்கும் ஆழ் கடலில் தன்னந் தனியே தவிக்கும் கப்பலுக்கும் உறுதுணையாக இருப்பது மோர்ஸ் முறைத் தத்துவங்கள்தான்.



மணியோசைக்கு எதிரோசை!

'கிட்டு'

ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே கடவுளின் பெருமையையும் கருணையையும் மக்களிடையே பரப்புவதற்காகக் கடல் கடந்து சில நல்ல மனிதர்கள் ஸ்காட்லாந்து தேசத்துக்கு வந்தார்கள். இவர்கள் தங்களை 'மாங்க்ஸ்' (பாதிரியார்) என்று கூறிக் கொண்டார்கள். இவர்கள் சிறந்த அறிவாளிகள். மக்களின் மன நோயையும் உடல் நோயையும் குணப்படுத்துவதில் வல்லவர்கள். இவர்கள் கடற்கரை ஓரங்களிலும், மலைக் குகைகளிலும், குடியானவர்களால் கைவிடப்பட்ட பாழடைந்த குடிசைகளிலும் தங்கிக் கொண்டு இயேசு பிரானின் இயக்கத்தைப் பரப்பிக்கொண்டு வந்தார்கள். உண்ண உணவும், தங்க இடமும் எங்கு கிடைத்தாலும் அங்கெல்லாம் இவர்கள் வேறு என்ன அசௌகரியங்கள் இருந்தாலும் அவைகளை இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டு தங்கள் கடமையே கருத்தாகக் கடவுள் தொண்டாக மக்கள் தொண்டு செய்து வந்தார்கள்.

மலைப் பிரதேசத்து மக்களுக்கு நாகரிகத்தைக் கற்றுக் கொடுத்தார்கள். அவர்கள் நோய்வாய்ப்பட்டால் மருந்து கொடுத்துக் குணப்படுத்தினார்கள். இப்படித் தொண்டு செய்த இவர்களை மக்கள் அன்போடு நேசிக்கலானார்கள் தங்களுக்கு வாழ்வளித்த இந்தப் புனிதர்களுக்குத் தாங்களும் ஏதாவது செய்ய வேண்டும் என்று கருதிய மலைப் பிரதேச மக்கள் மாங்க்ஸ் வாழ மடாலயங்களைக் கட்டிக் கொடுத்தார்கள், பாதிரிமார் வசதியாக வாழ்வதற்காக. ஆரம்ப நாட்களில் கஷ்டப்பட்ட பாதிரிமார்களுக்கு இந்த மடாலயம் மகிழ்ச்சியையும், சுக வாழ்வையும் கொடுத்தன. பாதிரிமார்களின் அறிவும், தொண்டு மனப்பான்மையும் நாடு முழுதும் பரவவே, பெரும் செல்வந்தர்கள் இம்மடாலயங்களுக்கு ஏராளமான மான்யங்களைக் கொடுத்தனர். தங்கள் குழந்தைகளைக் கல்வி பயில இவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். இப்படி அங்கங்கே பல மடாலயங்கள் ஏற்படலாயின.

ஸ்காட்லாந்து தேசத்தின் வடக்குக் கடற் கரைப் பகுதியில் இப்படியொரு மடாலயம் இருந்தது. மிகப் புனிதமான இம்மடாலயம் அழகான சூழலில் அமைந்திருந்தது. இங்கு வாழ்ந்த பாதிரிமார்கள் மகிழ்ச்சி நிறைந்தவர்களாக விளங்கினர். மற்ற மடாலயங்களை விட இதற்கு ஒரு தனிப் பெருமை உண்டு. இந்தப் பிராந்திய மக்கள் மிக உயர்ந்த உலோகத்தைக் கொண்டு, கலைத் திறன் மிக்க சிற்பிகளின் உதவியோடு அற்புதமான மணிகளை வார்த்து வழங்கி இருந்தார்கள். இப்படி ஒரு மணியா, இரண்டு மணிகளா? ஐந்து மணிகள், கடவுளின் புகழைப் பரப்ப!

பூலோக சுவர்க்கமாக விளங்கிய இந்த மடாலயத்துக்கு ஒரு குறைமட்டும் இருந்தது. இந்தப் பகுதியில் கடற் கொள்ளைக்காரர்களின் நடமாட்டம் அதிகம். தற்காப்பு ஏதுமில்லாத இம் மடாலயம் அடிக்கடி கொள்ளைக்காரர்களின் பார்வைக்கு இலக்காகுமானால் அதன் அழகும் அமைதியும் செல்வமும் சூறையாடப்படுமே என்று பயந்து, நடுங்கிக் கொண்டிருந்தார்கள் பாதிரிமார்கள்.

ஆனாலும் ஒரு திருப்தி. கடலிலிருந்து இந்த மடாலயத்தைச் சுலபமாகக் காண முடியாது. நெடிதுயர்ந்த மரங்களால் மறைக்கப்பட்டிருந்தது இம் மடாலயம். மலைப்பிரதேசத்துச் சாம்பல் நிறப் பாறைகளோடு கலந்து காணப்பட்டன அதன் கட்டடங்கள். ஆகவே கடற் கொள்ளையர்களின் பார்வையில் அது படவில்லை. இப்படியே இது கடைசி வரையிலும் கூடத் தப்பியிருக்கும், ஓர் இளம் பாதிரி அசட்டுத்தனமான அந்தக் காரியத்தை மட்டும் செய்யாதிருந்தால்.

அப்படி அவர் செய்த காரியம் என்ன?

கலையழகும், கணீரென்ற ஓசையும் கொண்ட அந்த மணிகளை இழுத்து இழுத்து ஒலிக்கச் செய்யும் பொறுப்பு அந்தப் பாதிரியுடையது. அந்த மணிகளை அடிப்பதில் அவருக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. ஒவ்வொரு முறையும் அதை அடிக்கும்போது மிக உற்சாகத்துடன் அவைகளை இழுத்து இழுத்து ஒலிக்கச் செய்வார்.

கடற் கொள்ளைக்காரர்கள் அந்தப் பிரதேசத்தில் வந்து இறங்கி இருக்கும்போது மட்டும் மடாலயத்து மணிகள் ஒலிக்காது. தங்கள் இருப்பிடத்தை அவர்களுக்குக் காட்டிக் கொடுக்க விரும்பாத அவை அந்தச் சமயங்களில் மௌனமாக இருக்கும். அம்மாதிரி வேளைகளில் அந்த இளம் பாதிரி வருத்தத்தோடு இருப்பார். மணியை ஒலிக்காத உலகம் வெறும் சூன்யமாகத் தோன்றும் அவருக்கு.

ஒரு சமயம் கடற் கொள்ளைக்காரர்கள் அந்தப் பிரதேசத்தின் துறைமுகத்தில் முகாமிட்டிருந்தார்கள். இரண்டு நாட்களாக மடாலயத்து மணிகள் ஒலிக்கவில்லை. மணியடிக்கும் பாதிரிக்குத் தவிப்பான தவிப்பு. அவரது கை துருதுருவெனத் துடித்தது. 'ஒரே ஒரு தடவை, மிக மெதுவாக ஒரே ஒரு மணியை மட்டும் இழுத்து ஒலிக்கச் செய்தால் என்ன? அப்படியொன்றும் அதனால் அபாயம் வந்து விடாது' என்று எண்ணமிட்டபடியே மணியடிக்கும் ஆசையை அடக்க முடியாத அந்தப் பாதிரியார் ஒரு கயிற்றைப் பிடித்து இழுத்து ஒரு மணியை ஒலிக்கச் செய்து விட்டார். அவ்வளவுதான்...

அமைதியான அந்த மலைப் பிராந்தியத்துக் காற்று அந்த மணியோசையை மிகத் துல்லியமாக மிக மிகப் பெரிதாக்கிக் கணீரென்று ஒலிக்கச் செய்து விட்டது. கடற் கரையில் கப்பலில் இருந்த கொள்ளைத் தலைவனுக்கு அந்த இனிய ஓசை எல்லா ரகசியங்களையும் விளக்கிவிட்டது. அந்தக் காலத்தில் மடாலயங்களில்தான் செல்வம் குவிந்து கிடக்கும்.

''இந்தப் பக்கத்தில் ஒரு மடாலயம் இருப்பது இத்தனை நாட்கள் தெரியாமலே போய் விட்டதே! இன்றைக்கே அதைக் கொள்ளையடிக்க வேண்டும்'' என்று திட்டமிட்டான் அவன். அன்று இரவு நிலவு உச்சி வானத்துக்கு வரும்போது மடாலயத்தைத் தன் ஆட்களுடன் சூழ்ந்து கொள்ளத் திட்டமிட்டான்.

மடாலயத்தில் உள்ளவர்களுக்கு இப்படியொரு தாக்குதல் நிகழும் என்று நிச்சயமாகி விட்டது. தங்களில் ஒருவரான இளந் துறவியின் அசட்டுத்தனத்தினால் ஏற்படப் போகும் அவதியை எதிர்பார்த்து அதற்கேற்பச் செயல்படலானார்கள். மடாலயத்திலிருந்து, அடுத்திருந்த மலைகளிலுள்ள குகைகளுக்கு ரகசிய வழிகள் உண்டு. இம் மடாலயம் ஏற்படும் முன்பு அந்தக் குகைகளில்தான் கிறிஸ்துவத் துறவிகள் வாழ்ந்து வந்தார்கள். மடத்தின் செல்வங்களை மூட்டை கட்டிக் கொண்டு எல்லாரும் அக் குகைகளுக்குப் போய் விட்டார்கள். அக் குகைகளை யாராலும் கண்டுபிடிக்க முடியாது.

அன்று நள்ளிரவில் மடாலயத்துக் கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்த கொள்ளைக்காரர்கள் அது வெறிச்சோடிக் கிடப்பதையும் அங்கு மனிதர்களோ கொள்ளையிடப் பொருள்களோ ஏதுமில்லாதிருப்பதையும் கண்டு ஏமாந்து போனார்கள். ஏமாற்றமும் ஆத்திரமுமாக மடாலயம் முழுதும் சோதனைவிட்ட கடற் கொள்ளைக்காரர்களுக்கு ஏதுமே கிடைக்கவில்லை — அந்த அழகிய ஐந்து மணிகளைத் தவிர. ஒன்றுமில்லாததற்கு அதையாவது கொண்டு போகலாம் என்று அந்த ஐந்து மணிகளையும் கழற்றிக் கொண்டு கப்பலுக்குத் திரும்பினார்கள். கிண்டலும் கேலியுமாக, அந்த மணிகளை ஒலித்துக் கொண்டு கூத்தடிய அந்தக் கொடியவர்களிடம் சில பாதிரிமார்கள் ''அந்த மணிகள் ஆண்டவனின் சேவைக்காக இருப்பவை. அவைகளினால் உங்களுக்கு எவ்வித லாபமும் இல்லை. அவற்றைக் கொடுத்து விடுங்கள்'' என்று இறைஞ்சி



ணர்கள். ஆனல் கொள்ளைக்காரர்களா இணங்குவார்கள்? அந்த மணிகளைக் கப்பலின் சேமிப்பு அறைகளில் கொண்டு போய் வைத்துவிட்டு நங்கூரத்தை எடுத்துக் கப்பலைக் கிளப்பினார்கள். கப்பல் கிளம்பும்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. கப்பலின் அடித்தளத்தில் சேமிப்புக் கிடங்கில் கிடத்தப்பட்டிருந்த மணிகள் நாதம் எழுப்பின. தொங்கவிடப்பட்ட நிலையில் கயிற்றைப் பிடித்து அடிக்கும்போது எப்படி ஒலி எழுப்புமோ அந்த மாதிரி மணியோசை கேட்கலாயிற்று. முதலில் மிக மிக மெதுவாகவும் இனிமையாகவும் ஆரம்பித்த மணியோசை வர வரப் பெரிதாக 'டாண் டாண் டாண்' என்று செவிப் பறையைக் கிழிக்கும்படி ஒலிக்கலாயிற்று. முதலில் சின்ன மணி ஒலி எழுப்பியது. வெள்ளி நாக்கு அதற்கு. அதற்கடுத்த மணி கொஞ்சம் பெரியது. அடுத்தது அடுத்தது. கடைசியில் பெரிய கண்டா மணி. இப்படி அவை மாறி மாறி இடை விடாமல் ஒலித்த போது மாலுமிகளான கடற் கொள்ளைக் காரர்கள் கதிகலங்கிப் போனார்கள்.

அது மட்டுமா? பாய்மரங்களை விரித்தாயிற்று. கப்பல் கிளம்புவதற்கு ஏற்ற நல்ல காற்று வீசிக் கொண்டிருந்தது. ஆனாலும் ஏனோ கப்பல் ஓர் அங்குலம் கூட நகரவில்லை. அப்படியே அங்கேயே கற்சிலையாக நின்றது. கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு சக்தி பெரிய நங்கூரமாக அதை அப்படி அழுத்தி நிறுத்தி யிருந்தது. சுக்கானைச் சுழற்றினார்கள் மாலுமிகள். கப்பல் நகரவில்லை. காதுகளைச் செவிடாக்கும் மணியோசை, நகராத கப்பல். கொள்ளைக் கப்பல் மாலுமிகள் கதி கலங்கிப் போனார்கள். அவர்களிடையே பீதி பரவியது. அந்தச் சூனியக்கார மணிகளைத் தூக்கி வந்து கடலில் எறிந்து விட எண்ணினார்கள். ஆனல்...

அவர்களுடைய விழிகள் பிதுங்கி வெளியே வரும்படி அந்த மணிகள் ஐந்தும் வளர்ந்து வளர்ந்து வளர்ந்து பிரும்மாண்டமாகி மேலே கிளம்பி வந்தன பூதாகாரமாக. கொடியவர்களான கொள்ளைக்காரர்கள் பீதியினால் அலறினார்கள். மணிகளின் கனம் தாங்காமல் கப்பல் கடலில் மூழ்கியது. அத்தனை பேருடன் கப்பலையும் கடலின் அடிக்குக் கொண்டு போய் அழுத்தின, அந்த மாய மணிகள். ஒருவராவது உயிர் பிழைக்கவில்லை.

மக்கள் மனம் மகிழ்ந்தார்கள். ஆண்டவன் நேர்மையாளர்களின் பக்கம் இருப்பதை நிருபித்த இந்த நிகழ்ச்சியினால் அவனுக்கு உள்ளமுருக அஞ்சலி செலுத்தினார்கள். மடாலயத்தின் மகிமை பெருகியது. மத குருமார்களின் பெருமை உயர்ந்தது. உடனே பொதுமக்கள் நிதி திரட்டி, அதே மாதிரி ஐந்து மணிகளை வார்த்து மடாலயத்துக்கு அளித்தனர்.

புதிய மணி கணீரென்று ஒலிக்கும் போதெல்லாம் மலையடிவாரத்தில் கடலின் விரிகுடாவில் கப்பல் கவிழ்ந்து மூழ்கிய இடத்திலிருந்து புதிய மணியோசைக்குப் பதில் சொல்லுவதுபோல் கடல் ஆழத்திலிருந்து பழைய மணியோசை கேட்கலாயிற்று. அது எதிரொலி என்று சிலர் கூறலாம். ஆனல் ஆண்டவனிடம் அசையாத பக்தி கொண்டவர்கள் அந்த ஒலி, மூழ்கிய பழைய மணியிலிருந்து வருவதாகத் தான் நம்புகிறார்கள். அந்த மடாலய மணியோசைக்குக் கடலிலிருந்து பதிலோசை கேட்பதைக் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் இன்றைக்கும் அங்கு போனல் கேட்கலாம்.

'பார்' விளையாட்டைப் பார்!


இந்தப் பெண் எதைப் பார்க்கிறள்? தான் பார் விளையாடுவதையே தான்! ரொம்பப் பொறுமைக் காரியாக்கும் இவள்! சமீபத்தில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் ஒல்கா என்ற ரஷ்யப்பெண் உடற்பயிற்சி செய்வதில் தங்கப் பதக்கம் பெற்றுளாம். அதே போலத் தானும் அந்த ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெறவேண்டுமென்று பதினொரு வயதான காட்கின், ஒல்காவின் முறைகளைப் பின்பற்றி உடற்பயிற்சிகளில் ஈடுபட்டிருக்கிறள். இவளுடைய பொறுமை பாராட்டப்பட வேண்டியதுதானே?

— பு. பி. எஸ்.



முதல்வரை வரைய முயன்று பாருங்கள்!

- தாணு



இதழில். யார்?

தெரியுமா?

562. சுவர்க்கப் பறவையும் (Bird of Paradise) காகமும் ஒரே இனத்தைச் சேர்ந்தவைதான். இது தவறு சரியா ?

563. விக்டோரியா நீர்வீழ்ச்சி எந்த நதியில் ஏற்படுகிறது ?

564. கருங்கடலுக்குள் சங்கமமாகும் மிகப் பெரிய நதியின் பெயர் என்ன, நீளம் எவ்வளவு மைல்கள் ?

565. உலகின் மிகப் பெரிய கண்டங்கள் இரண்டு. என்ன என்ன ?

566. மாக்னா கார்டா (Magna Carta) உடன்பாட்டில் கை ஒப்பமிட்ட ஆங்கிலேய மன்னர் யார், எந்த ஆண்டில்?

567. நாய், பூனை இவைகளில் குள்ள நரி எந்த இனத்தைச் சேர்ந்தது ?

568. ஒரு குழாயில் உள்ள நீர் உறைந்து பனிக்கட்டியாகும்போது அக்குழாயில் விரிசல் ஏற்படுகிறது. இது ஏன்?

569. சூரியனுக்கு மிக அருகேயுள்ள கிரகம் எது?

570. கார்பன்டையாக்ஸைடில் (கரிய மில வாயு) உள்ள பொருள்கள் என்ன என்று தெரியுமா?

571. அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் கையொப்பமான ஆண்டு எது?

572. பூமியிலிருந்து சந்திரனின் தூரம் உத்தேசமாக எவ்வளவு மைல்கள்?

573. ஒரு ரூபாய் நாணயத்தையும் ஒரு பறவையின் இறகையும் சூனியமாக்கப்பட்ட (காற்றில்லாத) இடத்தில் மேலிருந்து கீழே போட்டால் முதலில் தரையைப் போய் அடைவது எதுவாக இருக்கும்?

574. ஹூமிடார் (Humidor) என்பது சுருட்டுகளைச் சேமித்து வைக்கும் பெட்டி, அறையில் கதகதப்பை உண்டாக்கும் சூடான காற்றளிக்கும் ரேடியேட்டர், கதகதப்பை அளவிடும் கருவி. எது சரி?

தெரியுமே!

562. சரி.

563. ஸாம்பஸி நதியில்.

564. டான்யூப். நீளம் 1725 மைல்கள்.

565. ஆசியா, ஆப்பிரிக்கா.

566. மன்னர் ஜான். 1215ல்.

567. நாய் இனத்தை.

568. தண்ணீர் பனிக்கட்டியாகும்போது விரிவடைந்து அதிக இடத்தை ஆக்கிரமித்துக் கொள்கிறது. ஆகவே விரிசல் ஏற்படுகிறது.

569. மெர்க்குரி.

570. கார்பன் (கரி) பிராண வாயு.

571. 1776ல்.

572. 2,37,300 மைல்கள்.

573. இரண்டும் சேர்ந்து ஒரே சமயத்தில் கீழே விழும்.

574. சுருட்டுச் சேமித்து வைக்கும் பெட்டி.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்

UCO-4/72



சிறு சேமிப்பே பெரிய கணக்குகளாக வளருகிறது



பணம் சேமிப்பதற்கும், கரண்ட்,
சேவிங்ஸ், பிக்ஸட்,
மற்றும் ரெக்கரிங்
கணக்குகளை
தொடங்கவும்
நாங்கள் எல்லா
வித சௌகரியங்
களையும் அளிக்கிறோம்.

யுனைடெட்
கமர்ஷியல்
பாங்க்

தலைமை அலுவலகம்: கல்கத்தா


ருசியானவை... அருமையானவை... பிரமாதமானவை.
30 பைசாதான்!
PARLE
POPPINS
MIXED FRUITY SWEETS
30 Paise
புதிய
பார்லே
பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்
எலுமிச்சை, ஆரஞ்சு, சாத்துக்குடி, அன்னாசி மற்றும்
ராஸ்ப்பெர்ரி ஆகிய ஐந்து பழரசச் சுவைகளில்
ருசிமிக்க 13 மிட்டாய்கள்—குறைந்த விலைகொண்ட
கையடக்கமான பேக் ஒவ்வொன்றிலும்!
பாப்பின்ஸ் சுவையுங்கள்—பழரசச் சுவையை அனுபவியுங்கள்